பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 04 சனிக்கிழமை 20.11.2021 கதிர் 15

**இனிது ரகசியம் அல்ல!**

ஊடகத்துறையில் ஒவ்வொருவர் ஒவ்வொருதுறையில் துலங்குவர். என்னுடைய ஆரம்ப காலம் Courts and Sports. நான் விளையாட்டுத்துறைச் செய்தியாளனாகவும் நீதிமன்றச் செய்தியாளனாகவுமே ஆரம்பத்தில் தேர்ந்தேன்.

பின்னாளில் பிற பக்கம்02

# அமெ. பாதுகாப்புத் தரப்புடனும் தமிழர் பிரதிநிதிகள் குழு பேச்சு



## வெள்ளை மாளிகையை ஒட்டி நடந்தது

வொஷிங்டன், நவம்பர் 20

அமெரிக்காவின் வொஷிங்டன் டி.ஸிக்குச் சென்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் குழு அங்கு அமெரிக்க ஜனாதிபதியின் கீழ் நேரடியாக இயங்கும் அமெரிக்கத் தேசியப் பாதுகாப்புக் கவுன்ஸிலின் முக்கிய இரு பிரதிநிதிகளைச் சந்தித்து ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக உரையாடினர் என அறியவருகின்றது. 09

## 5,000 ரூபாவில் வீடு கட்ட முடியுமா? தோட்ட மக்களை ஏமாற்றிய பட்ஜட்

### பொன்சேகா எம்.பி. ஆவேசம்



மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மீண்டுமொரு முறை இந்த அரசால் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 2

## இலங்கையில் உணவுப்பற்றாக்குறையை எதிர்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்

### அமைச்சர் பந்துல கூறுகின்றார்



இலங்கையில் எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ள பொதுமக்கள் தயாராக இருக்கவேண்டும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனாவில் உலகின் மிகப் பெரிய மக்கள்தொகை உள்ளது. அதே நேரத்தில் அவர்களின் உணவுத் தேவையும் அதிகமாக உள்ளது.

கொரோனா வைரஸிலிருந்து உருவாகும் உலக உணவுப் பற்றாக்குறைக்கு 09

## மாப்பாண முதலியாரின் நினைவாக யாழ்.மாநகர சபைக்குச் செங்கோல்



(இ.கலையமுதன்)

யாழ். நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு செங்கோல் ஒன்று நேற்று கையளிக்கப்பட்டது.

அண்மையில் இறைபதம் அடைந்த நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண 2

## பாதுகாப்பு அமைச்சுக்கு எதற்கு அதிகளவு நிதி?

### செல்வம் எம்.பி. கேள்விக்கணை

நாடு வறுமையில் சிக்கித் தவிக்கையில் இராணுவத்துக்கு எதற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தவா இந்த நகர்வு?

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் 09

## ஆளுநரால் மீளப் பணிக்கு வந்தவர் ரூ.23 லட்சம் நிலுவை கோருகிறார்

(ந.லோகதயாளன்)

பணியிலிருந்து இடைநிறுத்தப்பட ஆசிரியரின் இடைநிறுத்தல் அறிவித்தல் ஆளுநரின் உத்தரவின் பெயரில் மீளப்பெறப்பட்டமையால் 23 லட்சம் ரூபா சம்பள நிலுவைக் கொடுப்பனவை வழங்குமாறு ஆசிரியர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொண்டராசிரியராக தேர்வான ஒருவர் முன் அனுமதி இன்றி விடுமுறையில் 2

## 14 பேர் மரணம்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்று 2

## இலண்டனில் இருந்து யாழ்.வந்தவர் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

இலண்டனில் இருந்து கடந்த மாதம் யாழ்ப்பாணம் திரும்பியவர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று மரணமடைந்தார்.

நடராசா மிரேஸ்குமார் (வயது 29) எனும் கொழும்புத்துறையைச் சேர்ந்தவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அவர் வீட்டில் இருந்த வேளை நேற்றுக் காலை திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டு கீழே வீழ்ந்துள்ளார்.

உடனே அவர் அவசரமாக யாழ். போதனா 09

# மக்கள் அணிதிரண்டு வீதிக்கு வந்தால் அனைத்தையும் சுருட்டிக்கொண்டு அமெரிக்காவுக்கு ஓடவேண்டி வரும்!

## நாடாளுமன்றில் அரசுக்கு வெல்கம எம்.பி. பகிரங்க எச்சரிக்கை



நாடாளுமன்றத்தில் எம்.பிக்களின் எண்ணிக்கை முக்கியமல்ல. பெரும்பான்மை ஆதரவு என்பதும் முக்கியமல்ல. ஆனால், மக்கள் அணிதிரண்டு வீதிக்கு வந்தால் அனைத்தையும் சுருட்டிக்கொண்டு அமெரிக்காவுக்கு ஓடவேண்டி வரும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான நேற்றைய விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முறையாகச் செயற்படாவிட்டால் தோல்வியை சந்திக்க நேரிடும் என்பதை ஐக்கிய மக்கள் சக்தியினா அவர்களின் ஆர்ப்பாட்டத்தினூடாக அரசுக்குக் கற்பித்துள்ளனா. மக்கள் எதிர்ப்பு எங்கிருந்து கிளம்பும் என்பது எங்களால் சரியாக குறிப்பிட முடியாது. 09

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துறைகளிலும் துலங்கவும் தேறவும் வாய்ப்புக் கிடைத்தது. சிலர் அரசியல் கூட்டங்கள், நாடாளுமன்ற செய்திகளைத் தொகுத்தல், புலனாய்வுச் செய்திகள் போன்றவற்றில் மிளிருவர். நான் ஏனோ அவற்றில் அதிக நாட்டம் செலுத்தவில்லை.

ஆனால் பிற ஊடகவியலாளர்கள் பலருக்குத் கிட்டாத ஒரு வாய்ப்பு – ஒரு துறையில் – எனக்குக் கிட்டியது.

அது – தரப்புகளுக்கு இடையிலான ஊடாட்டங்கள், பேச்சுகள் பற்றிய உள்வீட்டுத் தகவல்களை ஊடுருவி அறிந்து செய்திகளாக வெளிக்கொணர்வது.

அந்தப் பழங்கதையை நான் இப்போது பேசுவதற்குக் காரணம் உண்டு.

1981, 82 காலப் பகுதியிலே – இருபது, இருபத்தியிரண்டு வயது இளைஞனாகக் கொழும்பில் காகிதத்தையும் போனாவையும் வைத்துக் கொண்டு ஊடகத்துறைக்குள் ஊறிய காலத்தில் இருந்தே, இந்த இரு தரப்பு ஊடாட்டங்கள் – பேச்சுகள் – பற்றிய தகவல்களை முந்திக் கொண்டு வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியே வந்திருக்கின்றது.

அச்சமயத்தில் ஜே.ஆர் – தமிழர் விடுதலைக் கூட்டணி பல சுற்றுப் பேச்சுகள் கொழும்பில் நடந்தன. அவை பற்றிய செய்திகளை நான் முந்திக் கொண்டு தந்திருக்கிறேன்.

பின்னர், திம்புப் பேச்சுகள், பெங்களூர் பேச்சுகள் என ஈழத் தமிழர் தரப்பு சம்பந்தப்பட்ட இரு முக்கிய பேச்சுகள் நடைபெற்ற காலத்தில் நான் எந்த ஊடகத்திலும் பணியாற்றவில்லை. அதனால் அவை பற்றிய செய்திகளைப் பெற்றுத் தரும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை.

ஆனால், அதற்குப் பிறகு எல்லாச் சரித்திரமும் வாசகர்களுக்குத் தெரியும். அவை பற்றிய செய்திகளை, தகவல்களை, உள்வீட்டு இரகசியங்களை முதன் முதலில் வெளிக் கொணருவதில் என் பங்களிப்பு அந்தந்தக் கால வாசகர்களுக்கு அனுபவப் பாடம்.

ஜனாதிபதி பிரேமதாஸா காலத்தில், கொழும்பில் பிரேமதாஸா அரசு – புலிகள் பல சுற்றுப்பேச்சுக்கள். அதில் புலிகள் தரப்பில் பங்கு பற்றிய பாலசிங்கம், யோகரத்தினம் யோகி, அரசுத் தரப்பில் பங்கு பற்றிய ஹமீத் போன்றோருக்கு நெருக்கமானவன் என்ற வகையில் உள்வீட்டுத் தகவல்களை முந்திக் கொண்டு வெளியிடும் தொடர்பாடல் வாய்ப்பு பெரும்பாலும் எனக்கே கிட்டியது.

அது போலவே சந்திரிகா அரசு யாழ்ப்பாணத்தில் புலிகளுடன் நடத்திய இரண்டு, மூன்று சுற்றுப்பேச்சுகள், சந்திரிகா – பிரபாகரன் கடிதப் பரிமாற்றங்கள் மூலம் பகிர்ந்து கொண்ட விவகாரங்கள் என்ற பேச்சுகள் தொடர்பான எனது எழுத்துப் பணி நீண்டது.

பின்னர் ரணிலின் அரசு ஆறு நாடுகளில் புலிகளுடன் பேச்சு நடத்தியது. நோர்வேயில் புலிகளுடன் சேர்ந்தும், ஜப்பானில் தனித்தும், உதவி வழங்கும் நாடுகளுடன் மாநாடுகளை நடத்தியது. இவை எல்லாவற்றின் போதும் நேரில் பிரசன்னமாகி, பக்கத்தில் இருந்து, செய்திகளைச் சேகரித்து முந்திக்கொண்டு தந்தேன்.

அதேபோல மஹிந்த அரசு புலிகளுடன் ஜெனீவாவில் இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியது. அதற்கு முன்னரும் பின்னரும் நடைபெற்ற விடயங்கள் உட்பட அந்த ஜெனிவாப் பேச்சுகளிலும் நேரில் பிரசன்னமாகி முக்கிய செய்திகளை முந்திக் கொண்டு தந்தேன்.

'உள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வு ஒன்றைப் பரிசீலிக்க புலிகள் இணங்குகின்றனர்' என்ற செய்தியை நோர்வேயிலிருந்து முதல் முதலில் 'பிரேக்' பண்ணிய பெருமை எனக்குரியது.

புலிகளின் முடிவுக்குப் பின்னர் மஹிந்த அரசுடன் 2011, 2012 இல் தமிழ்த் தேசிக்கூட்டமைப்பு கொழும்பில் 16 சுற்றுப் பேச்சுக்கள் நடத்திய போதும் அவை பற்றிய செய்திகளை நான் முன்னின்று வாசகர்களுக்குத் தந்தேன்.

இந்த சுயபுராணம் நிச்சயம் உங்களுக்கு அலுப்புத் தட்டும். எரிச்சல் தரும். ஆனால் அதை நான் கூறவேண்டியவனாக இருக்கிறேன். அதற்குக் காரணம் உண்டு.

இந்த நாற்பது ஆண்டு காலத்தில் இப்படி சமரச முயற்சிகள், பேச்சுகள் தொடர்பாக முந்திக் கொண்டு – அல்லது தனித்துவமாக – அல்லது 'எக்ஸ்குளுசிவ்' ஆக – நான் செய்திகளைத் தந்தபோதெல்லாம் அதற்காக நான் பாராட்டப்பட்டிருக்கிறேன். எதிரெதிர்த் தரப்புகளில் இருந்தும் கூட அவை கிடைப்பதுண்டு.

பேச்சு மேசையில் இருக்கும் புலிகள் மீண்டும் காட்டுக்குப் போகத் தயாராகின்றார்களா அல்லது காட்டில் – யுத்தத்தில் – குறியாக இருக்கும் புலிகள் பேச்சு மேசைக்கு வர இணங்கும் நிலையில் இருக்கின்றார்களா என்பதை என் செய்தி வடிவங்களில் அல்லது ஆசிரியதலையங்கங்களில் வரிகளுக்கு இடையில் பூதக் கண்ணாடி வைத்து நோட்டமிட்டு அறிவதற்காக தகைமை பெற்ற மொழி பெயர்ப்பாளர்களை கொழும்பில் மேற்குலக தூதரகங்கள் வைத்திருந்த ஒரு காலம் பற்றி நான் நன்கறிவேன்.

இப்படி இப்போது நான் சுயதம்பட்டம் அடித்து, அவற்றைச் சுட்டுவதற்கு ஒரு காரணம் உண்டு.

இந்த முற்பட்ட காலங்களில் எல்லாம் முன்னெடுக்கப்பட்ட பேச்சு முயற்சிகள், சமரச எத்தனங்கள் எல்லாம் வெற்றியே பெறவில்லை. அதனால் தான் இன்னும் தொடர்ந்து போராடவும், பேசவும், முயற்சிக்கவும் வேண்டியுள்ளது.

முன்னைய முயற்சிகள் வெற்றி பெறாத போதிலும் அப்போது அவை பற்றிய செய்திகளை – பல சமயங்களிலும் நம்பிக்கை தரும் விதத்தில் வெளியிட்டமைக்காக – யாரும் எம்மைக் குறை கூறவில்லை. பேச்சுப் பற்றிய முக்கிய விடயங்களை நான் முந்திக் கொண்டு வெளியிட்டமைக்காக யாரும் நான் புலிக்காகப் பொய்ப் பிரசாரம் செய்கிறேன் என்று குற்றம் சொல்ல முன்வரவில்லை. மாறாக என் செய்திக் காகக் காத்திருந்தார்கள்.

இங்கு பேச்சு, அங்கு பேச்சு, இன்ன விடயம் பேசுகின்றார்கள், இன்ன விடயம் முறியும் நிலையில் இருக்கின்றது என்று நாங்கள் செய்தி வெளியிட்டமைக்காகவோ அல்லது பேச்சு மூலமான தீர்வுக்கு தேவையற்று அதிக நம்பிக்கை தருகின்றோம் என்றோ யாரும் என்னைக் கடிந்து கொள்ளவோ, திட்டித் தீர்க்கவோ முன்வரவில்லை.

ஆனால், இப்போது அது நடக்கின்றது. வித்தியாசமாக – விசேடமாக – அது முன்னெடுக்கப்படுகின்றது.

செய்திகளை முந்திக் கொண்டு தருவது என் பணி. அதுவும் இத்தகைய ஊடாட்டங்கள், பேச்சுகள் பற்றிய செய்தியை எந்த வழி மூலமேனும் முகர்ந்து பிடித்து, முந்திக் கொண்டு தருவது என் வேலை. அதை நான் செய்வேன். செய்ய வேண்டும். செய்தியை வலை விரித்து தேடிப் பிடிப்பதற்காக நான் எந்த exten வரையும் போவேன்.

சுமந்திரனுடனோ அல்லது கூட்டமைப்புடனோ இருக்கும் கோபத்துக்காக, செய்திகளை நேரத்துடன் பெற்றுத் தரும் என்னை நோகாதீர்கள். சமூக ஊடகங்களில் என்னைத் திட்டித் தீர்க்காதீர்கள்.

இல்லாத பொல்லாத எதையும் நாம் செய்தியாக்கித் தரவில்லை. உள்ளதை – இருப்பதை – கொஞ்சம் சுவைபட, முந்திக் கொண்டு தருவோம். அவ்வளவுதான்.

ஏற்கனவே ஆரம்பத்தில் நான் சொல்லியபடி இது நான் தோர்ந்த துறை. கைவந்த கலை. அதனால் இதில் கொஞ்சம் 'ஸ்கோர்' பண்ணுகிறோம். அவ்வளவுதான்.

நாம் தரும் தகவலில் – செய்தியில் – தப்பு இருக்குமானால், தவறு இடம்பெறுமானால் – அதைச் சுட்டிக் காட்டுங்கள். நிச்சயம் திருத்துவோம். திருந்துவோம்.

உங்கள் அரசியலுக்காக – விருப்பு வெறுப்புக்காக – எமது செய்தி அறிக்கையிடலைக் கொச்சைப்படுத்த முயலாதீர்கள்.

செய்திகளிலே – தகவல்களிலே –செய்தியாளனின் திறமையைத் தேடிப் பிடித்துப் பாராட்டுங்கள். காரணமேயில்லாத அபவாதக் குறை கூறலை நிறுத்துங்கள். அவை எவையும் எங்கள் பணியை தடுத்து நிறுத்தி விடா.

அமெரிக்கா போயிருக்கும், தமிழர் தரப்புடன் உங்களுக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சியோ, கோபமோ, வெறுப்போ இருக்கலாம். அது தப்பில்லை.

ஆனால், அக்குழு அமெரிக்கா தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலின் உயரதிகாரிகளுடன் பேசியது என்று செய்தி வெளியிட்டமைக்காக எங்களுடன் கோபிக்காதீர்கள். எங்களைத் திட்டி சமூக ஊடகங்களில் அர்ச்சனை செய்யாதீர்கள். அதில் பயனேதும் விளையப் போவதுமில்லை.

அப்படி நாங்கள் வெளியிட்ட செய்தியில் தவறு இருந்தால் அதைச் சுட்டிக்காட்டுங்கள். அதை ஆதாரத்துடன் மறுங்கள்.

அதை விடுத்து காலைக்கதிரையும், அதன் ஆசிரியரையும் காரணமின்றி வையாதீர்கள். அதில் அர்த்தமில்லை.

★ ★ ★

தமிழ்க் கூட்டமைப்பின் வசமிருந்த, நெடுங்கேணி பிரதேச சபையும் கையை விட்டுப்போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியத் தரப்பிடமிருந்து அது கை நழுவிப் போவதற்கு தமிழ்த்தேசியத்தின் பெயரால் அரசியல் செய்யும் சில அரசியல் பிரகிருதிகளின் சதி நாச வேலை தான் காரணம். அதன் விவரத்தை வரும் தினங்களில் பார்ப்போம்.

– மின்னல் –

## 14 பேர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 86 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 3 பெண்களும், 11 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 5, 000 ரூபாவில் வீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று நடைபெற்ற வரவு – செலவுத் திட்ட மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எந்நாளும் ஏமாற்றப்படுகின்றனர். இம்முறையும் பாதீடு ஊடாக ஏமாற்றப்பட்டுள்ளனர். மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்எனநிதிஅமைச்சர்அறிவித்துள்ளார்.

பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு குறைந்தபட்சம் ஒரு இலட்சம் வீடுகளாவது தேவை. அப்படியானால் ஒரு வீட்டுக்கு 5 ஆயிரம் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த தொகையை வைத்துக் கொண்டு மலசலகூடம் ஒன்றைக் கூட கட்டமுடியாது.

தோட்ட மக்களுக்கு வீடொன்றை நிர்மாணிப்பதற்கு குறைந்தபட்சம் ஒன்றரை மில்லியன் ரூபா தேவை – என்றார்.

## யாழ்ப்பாண முதலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதலியாரின் நினைவாக நல்லூர் ஆலயம் மற்றும் யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக பிரதிஷ்டை செய்யப்பட்ட செங்கோல் கையளிக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 11ஆவது நிர்வாக அதிகாரி குமரேஷ் சயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியாரால் யாழ். மாநகர மேயர் மணிவண்ணனிடம் நல்லூர் ஆலய வளாகத்தினுள் வைத்து நேற்று மாலை 5.30 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக செங்கோல் கையளிக்கப்பட்டது.

## ஆளுநரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நின்ற காரணத்தால் வடக்கு மாகாண கல்வி அமைச்சால் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டார்.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்டவர் தனக்கான நியமனத்தை வழங்குமாறு தொடர் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் அந்த நியமனம் அரச நியமங்களின் பிரகாரம் வழங்க முடியாது என மாகாண கல்வி அமைச்சு தெரிவித்திருந்தது. இருந்தபோதும் புதிய ஆளுநரின் எழுத்து மூல உத்தரவின் பெயரில் சம்பந்தபட்ட ஆசிரியரின் பணி விலகல் கடிதம் இரத்துச் செய்யப்பட்டது.

இதற்கமைய இடைநிறுத்தக் கடிதம் மீளப் பெறப்பட்டமையால் அன்றிலிருந்து இன்று வரையான சம்பள நிலுவையை வழங்குமாறு கோரி தற்போது விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான தொகையாக 23 லட்சம் ரூபா கணக் கிடப்பட்டுள்ளதால் வடக்கு மாகாண கல்வி அமைச்சு மீண்டும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 – 03 – 1938



மறைவு
19 – 11 – 2021

### முருகேசம்பிள்ளை விசுவநாதன்

(ஓய்வுபெற்ற கொள்வனவு உத்தியோகத்தர், ப.நோ.கூ சங்கம், காரைநகர்)

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், கருங்காலியை வசிப்பிடாகவும் கொண்ட முருகேசம்பிள்ளை விசுவநாதன் அவர்கள் 19.11.2021ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசம்பிள்ளை – வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா – தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், மேனகையின் அன்புக் கணவரும், கிருஷ்ணவேணி (பிரதேச செயலகம் – காரைநகர்), குகநேசன் (கோட்டக்கல்வி அலுவலகம் – காரைநகர்), பாலேந்திரன் (இலங்கை வங்கி – மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருலோகேஸ்வரன் (பிரதேச செயலகம் – காரைநகர்) அவர்களின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், திருவாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், காந்திமதியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (21.11.2021) காலை 8.30 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கருங்காலி, காரைநகர்.**
**0775748617, 0778741813**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

காலைக்கதிர் Kalaikkathir

# ஈழத்தமிழருக்கெதிராக இழைக்கப்பட்ட மனிதவுரிமை மீறல்; சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் அறிக்கை சமர்ப்பிப்பு

ஈழத்தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படுவதை வலியுறுத்தியும் ரோமசாசனத்தின் 15 ஆவது பிரிவின்கீழ் பூர்வாங்க ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தும் தகவல் அறிக்கையொன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்குரைஞர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கனடாவைத் தளமாகக் கொண்டியங்கும் தமிழர் உரிமைக்கான குழுமத்தால் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் –

இலங்கையில் தமிழ் மக்களை இலக்குவைத்து மனிதாபிமானமற்ற மிகமோசமான குற்றங்களும் போர்க்குற்றங்களும் இழைக்கப்பட்டன என்பதற்குப் பெருமளவான சான்றுகள் உள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்டோர் மனித குலத்துக்கு எதிரான துன்புறுத்தல்கள், நாடுகடத்தல்கள் ஆகிய குற்றங்களைப் புரிந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. இந்தக் குற்றங்களின் ஒருபகுதி ரோம சாசனத்தில் அங்கம் வகிக்கும் கனடா, ஆஸ்திரேலியா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய உறுப்பு நாடுகளின் நில எல்லைகளுக்குள் நடைபெற்றவையாகும்.

மியன்மார் மற்றும் பங்களாதேஷ் ஆகிய வழக்குகளை முன்மாதிரியாகக் கொண்டு, இலங்கையில் இடம்பெற்ற மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான அதிகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இருக்கவேண்டும் என்று கடந்த வருடம் சர்வதேச தமிழ் அகதிகள் உதவி வலையமைப்புடன் இணைந்து எமது குழுமம் வலியுறுத்தியிருந்தது.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் இலங்கையைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான முயற்சி ஐக்கிய நாடுகள் சபையால் ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்துவிட்டன.

இருப்பினும் அப்போதிருந்து இலங்கையில் சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி மிகவும் கரிசனைக்குரிய வேகத்தில் சுருங்கிவருகின்றது.

குறிப்பாககடந்த 2015 ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கம் தானாக முன்வந்து இணையனுசரணைவழங்கிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திலிருந்து தற்போதைய அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக விலகியதுடன் மாத்திரமன்றி, எந்தவோர் உள்நாட்டு மற்றும் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளில் இருந்தும் ஆயுதப்படைகளைப் பாதுகாப்பேன் எனறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகிரங்கமாகவே சூளுரைத்திருக்கின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில் உலகளாவிய அதிகார வரம்பு என்ற கோட்பாட்டைப் பயன்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக நிலைமாறுகால நீதியை இடைவிடாமல் கோருவதைத் தவிர வேறு தெரிவுகள் எமக்கு இல்லை. – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசாங்கம் கவிழ்ந்துள்ளதாக ஒருநாள் விசேட செய்தி வரும்

### ராஜித ஆருடம்



அரசாங்கம் கவிழ்ந்ததாக ஒருநாள் காலை நித்திரைவிட்டு எழும்போது விசேட செய்தி வரும் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பண்டாரகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசாங்கத்தில் உள்ள பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேற விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும் விரைவில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி புதிய அரசாங்கம் உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

சிலர் உடனடியாகத் தம்முடன் இணைய விரும்பிய போதும் அதற்கு இன்னும் சிறிது காலம் கடக்க வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

எந்தவொரு சக்தியுடனும் இணைந்து இந்த அரசாங்கத்தை விரைவில் கவிழ்ப்பதுடன், ஒருநாள் காலைவிழுந்து எழும்பும் போது இரவு அரசாங்கம் கவிழ்ந்ததாகச் செய்தி வரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.







## கிழக்கு மாகாண சபையை கூட்டமைப்பு கைப்பற்றியதும் அதிக சுற்றுலாப்பயணிகள் வரும் இடமாக மாற்றப்படும்

### மதிமேனன் உத்தரவாதம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனினால் மட்டக்களப்பு ஓந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் மகாவித்தியாலயத்துக்கு மனையியல் பாடத்துக்காக மாணவர்கள் பயிற்சிக்கான குளிர்சாதனப்பெட்டி, தையல் இயந்திரம் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மக்களின் கோரிக்கைக்கு அமைவாக இவை வழங்கி வைக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் உத்தியோகபூர்வ செயலாளரும், இராச மாணிக்கம் மக்கள் அமைப்பின் முகாமையாளருமான மதிமேனனால் இவை வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

ஓந்தாச்சிமடம் அழகிய கடற்கரை உள்ள பிரதேசம். இதனை அழகுபடுத்துவதற்கான இரண்டு, மூன்று திட்ட முன்மொழிவுகளை எங்களது நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மத்திய அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றியதும், இந்த விடயங்களை நாம் செய்து காட்டுவோம். குறித்த பகுதியை சிறந்த சுற்றுலாத்தளமாக மாற்றுவோம். கிழக்கு மாகாணம் அதிக சுற்றுலாப்பயணிகள்வரும் இடமாகமாற்றப்படும். அதேபோன்று மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்தும் போது அதற்கான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.–எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மீள்சீரமைக்கப்பட்ட வாகன விலை எதிர்வரும் வாரத்தில் அதிகரிக்கும்

### வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவிப்பு

மீள்சீரமைக்கப்பட்ட வாகனங்களின் விலைகளை எதிர்வரும் வாரங்களில் அதிகரிக்கும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அதன் தலைவர் இந்திக்க சம்பத் மெரென்சிகே இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

'வாகன இறக்குமதியாளர்கள் 2022 வரவு–செலவுத் திட்டத்தில் இருந்து உயிர்நாடியை எதிர்பார்க்கிறார்கள், ஆனால் அது அவர்களுக்குச் சாதகமாக எந்த மதிப்பையும் சேர்க்கவில்லை.

கடந்த சில மாதங்களாக வாகனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தமக்கு சாதகமாக எந்தவொரு பெறுமதியையும் சேர்க்கவில்லை.

முன்னைய பிரச்சினைகளையே தாங்கள் தொடர்ந்து எதிர்கொள்கிறோம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகனங்களின் விலை வழங்கல் மற்றும் தேவைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும் என்றும் பொதுமக்களின் பொருளாதார நிலைதொடர்பாகத்தங்களுக்குத் தெரியாது என்றும் மெரென்சிகே மேலும் தெரிவித்தார்.

மீள்சீரமைக்கப்பட்ட வாகனங்களின் விலைகள் சமீபத்தில் 50 வீதத்துக்கும் அதிகமாக சில சந்தர்ப்பங்களில் கணிசமாக அதிகரித்துள்ளன.

2018 இல் மாருதி சுசுகி வேகன் கார் விலை சுமார் 30 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக இருந்தது. ஆனால் சமீபத்தில் அதன் சந்தை விலை 60 லட்சம் ரூபாவாக உயர்ந்துள்ளது. பிரபலமற்ற அனைத்து வாகனங்களின் விலைகளும் 25 வீதம் அதிகரித்துள்ளன. என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுங்கத்தால் கைப்பற்றப்பட்ட சுமார் 700 வாகனங்கள் பொருந்தக்கூடிய வரி செலுத்தப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்படும் என நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். கொவிட் வைரஸ் தொற்றால் ஏற்பட்ட அந்நிய செலாவணி நெருக்கடி காரண மாக வாகன இறக்குமதியை அரசாங்கம் தடைசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாகர்கோவில் பகுதிகளில் சட்டவிரோதமான மணல் அகழ்வு இடம்பெறுவதாக குற்றச்சாட்டு

தொடர்ச்சியாக நாகர்கோவில் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ.சுரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் வடக்கு, குடாரப்பு பகுதிகளில் கும்பல் ஒன்றால் மணல் கொள்ளை திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பகுதிகளில் ஒருசிலர் டிராக்டரில் ஏற்றி வந்து வீதிகளில் மணலைக் கொட்டுகின்றனர் எனவும், மற்றவர்கள் கனரக வாகனத்தைக் கொண்டு வந்து அள்ளிச் செல்கின்றனர் எனவும், பல்வேறு இடங்களிலும் இவ்வாறு மணல் ஏற்றப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இது ஒரு பாரிய திட்டமிடப்பட்ட செயல் எனவும், இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு உட்பட பலரிடமும் தொடர்ச்சியாக முறையிட்டும் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

3, 4 வருடங்களுக்கு மேலாகத் திருட்டு மணல் அகழ்வு அதிகரித்திருப்பதாகவும், உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஒரே நீதியை ஒழிக்கும் முயற்சி

ஜனநாயக வழிமுறைகளின் பெயரில் மக்களை ஏமாற்றி, அதன் மூலம் அதிக அதிகாரங்களை சுவீகரித்துக் கொண்ட அரசு, அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி நீதி முறையான ஆட்சியை மேற்கொள்ளவில்லை.

தனக்குள்ள அதிகாரங்களை – வலிமையை – நேர்மையான விதத்தில் பிரயோகித்து, நாட்டில் நீதி முறையான – நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதை விடுத்து, இன, மத, மொழி ரீதியாக மக்களை மேலும் பிளவுபடுத்தி, குரோதத்தை வளர்த்து, இன வாதத் தீயைக் கொழுந்து விட்டெரிய வைத்து, அதில் அரசியல் குளிர்காய விரும்புகின்றது இந்த ஆட்சிப்பீடம்.

அதற்கு அது கையில் எடுத்திருக்கும் பேரினவாதத் துரும்புதான் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற கோஷம்.

ஊழல், மோசடிகளுக்கு எதிராக வெளிப்படையாகவும், துணிச்சலாகவும் போராடிய ரஞ்சன் ராமநாயக்கா தமது எம்.பி. பதவியை இழந்தமை மட்டுமல்லாமல், சிறையிலும் வாடுகின்றார்.

ஆனால் நாட்டின் மிக மோசமான கொலைகாரர்கள் எல்லோரும் மன்னிப்பின் பேரில் வெளிவருகின்றார்கள். சுதந்திர புருஷர்களாக சமூகத்தில் நடமாடுகின்றனர்.

இது, இலங்கையில் நீதி எப்படி பலமுள்ளவர்களுக்கும், வசதியுள்ளவர்களுக்கும், செல்வாக்குள்ளவர்களுக்கும் ஒரு விதமாகவும், ஏனையோருக்கு வேறு விதமாகவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதற்கு நல்ல உதாரணம் என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் முன்னாள் சபாநாயகரும் மூத்த அரசியல்வாதியுமான கரு ஜயசூரிய.

நீதியும் சட்டமும் இப்படி ஆளாளுக்கு வெவ்வேறு விதமாகக் கோலோச்சுகின்றமையை நாட்டின் மக்கள் இன்று அடையாளம் கண்டிருக்கின்றனர் என்றும் அவர் சுட்டுகின்றார்.

இப்படி வெவ்வேறு விதமாக நீதியும் சட்டமும் கையாளப்படும் நடைமுறையே மாற்றப்பட வேண்டும். அதுதான் நாடு முழுவதுக்குமான 'ஒரே சட்டம்' நடைமுறையாக்கப்படும் முறைமையாக இருக்கவேண்டும் என்கின்றார் அவர்.

ஆனால், அரசோ – ஆட்சிப் பீடமோ – தனது பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்போக்குத்தனம் காரணமாக வேறு விதமாகச் சிந்திப்பதாக – திட்டமிடுவதாக –தோன்றுகின்றது.

இலங்கைத் தீவில் பௌத்த, சிங்களவர்களுக்கு மேலதிகமாக தமிழர்களும், முஸ்லிம்களும் வடக்கு, கிழக்கையும் பிற இடங்களையும் தங்கள் தாயகமாகக் கொண்டு, தனித்துவமான பண்பியல்புகள், வரலாற்றுக் கோலங்கள், தனியான மொழி, வாழ்வியல் முறைமைகள், பழக்க வழக்கங்கள், வழக்காறுகள் போன்றவற்றுடன் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் அந்தத் தனித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான விசேட சட்டங்கள், ஒழுங்கு விதிகள், வழக்காறுகள், நடைமுறைகள் அவரவர் பிரதேசங்களில் பின்பற்றப்படுகின்றன.

உதாரணமாக வடக்குத் தமிழர்களுக்கென தேச வழமைச் சட்டம், முஸ்லிம்களுக்கு என இஸ்லாமியச் சட்டம். இவை எல்லாம் இந்த மண்ணில் நூற்றாண்டுகள் கடந்தும் நடைமுறையில் – பாவனையில் – இருக்கும் ஏற்பாடுகள்.

'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற தனது புதுவிதமான அர்த்தம் கொண்ட சிந்தனைப் போக்கு மூலம், சிறுபான்மையினரின் தனித்துவத்தை உறுதிப்படுத்தும் சட்ட ஏற்பாடுகளை இல்லாதொழித்து, அதன் மூலம் அந்த இனங்களின் தனித்துவத்தையே – இருப்பையே – நாசமாக்கி அழிப்பதுதான் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியும், திமிரும் கொண்ட இந்த பேரினவாத ஆட்சியாளர்களின் திட்டம்.

'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்பது இந்த நாடு பௌத்த, சிங்களவர்களாகிய ஒரு தரப்புக்கு மட்டுமே ஏக உரிமை கொண்ட நாடு என்ற ஒழுங்குமுறையைப் பலவந்தமாக திணிக்கும் அராஜக நடவடிக்கையாகும்.

## அதிகரித்து வரும் கொவிட் தொற்றாளர்கள்
# மருத்துவர் அன்வர் ஹம்தானி எச்சரிக்கை

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 வீதம் முதல் 20 வீதத்துக்கு இடையிலான எண்ணிக்கையில் அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளரும் கொவிட் -19 ஒருங்கிணைப்பாளருமான மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை காரணமாக மக்கள் தற்போதைய சந்தர்ப்பதில் ஒன்று கூடுவதைத் தவிர்த்து புத்திசாலித்தனமாக நடந்து கொள்வது முக்கியமானது.

கொவிட் காரணமாக இது வரை வைத்தியசாலைகளில் 7 ஆயிரத்து 10 நோயாளிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலைகளில் ஒட்சிசனை நம்பி வாழும் 105 நோயா ளர்கள் இருக்கின்றமையுடன் 55 நோயாளர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மூன்றாவது அலையின் போது ஒட்சிசனை நம்பி வாழும் நோயாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 38 வரை அதிகரித்தது. தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 201 ஆக அதிகரித்தது. எனினும் ஒட்சிசன் நம்பியுள்ள மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை தற்போது ஒரு மட்டத்துக்குக் குறைந்துள்ளது.

கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்டமையே இதற்குக் காரணம் எனவும் இதனால், தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் மருத்துவர் ஹம்தானி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மஹிந்தவின் வழிகாட்டுதல் எனக்கு கிடைத்த பாக்கியம்

## ஜனாதிபதி கோட்டா பெருமிதம்



தனது சகோதரரும், இலங்கையின் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ, தமக்கு நிலையான பலமாக இருப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.

தனது பிறந்த நாளை முன்னிட்டு சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்த வாழ்த்துக்கு பதிலளிக்கும் வகையில் பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்தவின் பிறந்தநாளை கடந்த வியாழக்கிழமை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அவரால் வழி காட்டப்பட்டமை தனக்கு கிடைத்த பாக்கியம் எனத் தெரிவித்துள்ளார்

'எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் இவ்வளவு மகத்துவம் கொண்ட ஒருவரால் வழிகாட்டப்பட்டதற்கு நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. இலங்கை அரசியலில் அழியாத முத்திரையைப் பதித்த எனது அன்புச் சகோதரரே, உங்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என ஜனாதிபதி டுவீட் செய்துள்ளார்.

ஜனாதிபதியின் வாழ்த்துக்கு பதிலளித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தனது சகோதரர், தமக்கு நிலையான பலமாக இருப்பதற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்திலும் எரிபொருளுக்கு வரிசையில் மக்கள் நிற்கின்றனர்

## நாமல் ராஜபக்ஷ இப்படிக் கூறுகிறார்



உலகில் தற்போது எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் இங்கிலாந்திலும் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு வரிசையில் மக்கள் நிற்கின்றனர் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ரத்கம பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் விளையாட்டுத்துறை அமைச்சரான நாமல் ராஜபக்ஷ இதனைக் கூறியுள்ளார். உலகில் பல நாடுகளில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன.

எனினும் இலங்கை ஓரளவு அந்த நிலைமையில் இருந்து மீண்டு, தொழிற்சாலைகளை இயக்கி வருகிறது. தடைகளுக்கு மத்தியிலும் நாட்டை அபிவிருத்தி செய்து வருகிறோம். ஆர்ப்பாட்டங்களை நடத்தி மீண்டும் நாட்டை மூடும் தேவையே எதிர்க்கட்சிக்கு இருக்கின்றது.

எனினும் அப்படியான நிலைமை ஏற்பட இடமளிக்கப் போவதில்லை. எவ்வாறான சவால்கள் வந்தாலும் சௌபாக்கிய நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வோம். எதிர்கால சந்ததிக்கா நாட்டைக் கட்டியெழுப்புவோம் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை. "

- சார்ள்ஸ் டார்வின்
(பரிணாமவியலின் தந்தை)



இந்தவாரம் இவர்



# இந்திய சினிமாவில் இசை ஜாம்பவான்

## எஸ்.பி.பாலசுப்பிரமணியம்

இந்திய சினிமாவில் எஸ். பி. பாலசுப்பிரமணியம் என்ற பெயரின் மூலம் அறியப்பட்டவர் ஶ்ரீபதி பண்டிதாரத்யுல பாலசுப்பிரமணியம் என்ற இயற் பெயர் கொண்டுள்ள இவர் எஸ்.பி.பி.

ஶ்ரீபதி பண்டிதாரத்யுல பாலசுப்ரமணியம் என்ற இயற்பெயர் கொண்டுள்ள இவர், இந்திய சினிமாவில் புகழ்பெற்ற இசை பாடகராகவும், இசையமைப்பாளராக பணியாற்றி பல விருதுகளை வென்றவர். 1966 ஆம் ஆண்டு ஒரு தெலுங்குத் திரைப்படத்தில் பாடி திரைத்துறையில் அறிமுகமாகிய பாலசுப்பிரமணியம் தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு மற்றும் ஹிந்தி என பல மொழிகளில் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார்.

வெள்ளித்திரையில் பாடகர், இசையமைப்பாளர், திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் நடிகர் என பன்முகம் கொண்டு பணியாற்றி வந்துள்ள இவர், பல திரைப்பட நடிகர்களுக்கு பின்னணிக் குரல் வழங்கிய ஒருவர்.

இவரின் திறமைகளை கௌரவித்த இந்திய அரசு – இவருக்கு 2001 ஆம் ஆண்டில் ‘பத்மஶ்ரீ விருதும், 2011 ஆம் ஆண்டில் ‘பத்ம பூஷன்’ விருதும் வழங்கியுள்ளது.

எஸ்.பி.பாலசுப்பிரமண்யம் ஆந்திர பிரதேச மாநிலத்தில் உள்ள நெல்லூரில் எஸ்.பி. சம்பமூர்த்தி – சகுந்தலாமா ஆகியோரின் மகனாவார். அவரது தந்தை எஸ்.பி. சம்பமூர்த்தி ஒரு ஹரிகாதா கலைஞராக இருந்து பல நாடகங்களில் நடித்துள்ளார். இவருக்கு பாடகர் எஸ்.பி. சைலாஜா உட்பட இரண்டு சகோதரர்களும் ஐந்து சகோதரிகளும் உள்ளனர்.

தனது சிறு வயதிலேயே இசையின் மீது ஆர்வத்தை வளர்த்துக் கொண்ட பாலசுப்பிரமணியம், இசை சம்பந்தமாக பல குறியீடுகளைக் குறித்து இசையைக் கற்றுக்கொண்டார். பொறியியலாளராக வேண்டும் என்ற நோக்கத்துடன் அனந்தபூரில் உள்ள ஜே.என்.டி.யு. பொறியியல் கல்லூரியில் சேர்ந்த இவர், டைபாய்டு காய்ச்சல் காரணமாக ஆரம்பத்தில் தனது படிப்பை நிறுத்திவிட்டு, சென்னை இன்ஸ்டிடியூட் ஆப் இன்ஜினியர்களின் இணை உறுப்பினராக சேர்ந்தார்.

பாலசுப்பிரமணியம் தனது பொறியியல் படிப்பின் போது பல இசை சம்பந்தமான பல விடயங்களில் ஆர்வம் காட்டி வந்துள்ள இவர், பாடல் போட்டிகளில் பங்குபெற்று பல விருதுகளை வென்றார். 1964 ஆம் ஆண்டில், மெட்ராஸை தளமாகக் கொண்ட தெலுங்கு கலாச்சார அமைப்பு ஏற்பாடு செய்த அமெச்சூர் பாடகர்களுக்கான இசைப் போட்டியில் முதல் பரிசை வென்றார்.

அனிருட்டா, இளையராஜா, பாஸ்கர், மற்றும் கங்கை அமரன் ஆகியோரைக் கொண்ட ஒரு ஒளி இசை குழுவின் தலைவராக இருந்துள்ளார் பாலசுப்பிரமணியம்.

எஸ்.பி. கோதண்டபாணி மற்றும் கண்டசலா ஆகியோரால் தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு பாடல் போட்டியில் அவர் சிறந்த பாடகராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பெரும்பாலும் வாய்ப்புகளைத் தேடும் இசை அமைப்பாளர்களைப் பார்வையிடும் அவரது முதல் பாடல் ‘நிலவே என்னிடம் நெருங்காதே’ என்ற பாடலாகும்.

1960 களின் பிற்பகுதியில் தமிழ்த் திரையிசை உலகில் அறிமுகமான எஸ். பி. பாலசுப்பிரமணியம் ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து முன்னணிப் பாடகராக இருந்தவர். இவர் தமிழில் முதலில் பாடியது சாந்தி நிலையம் படத்தில் வரும் ‘இயற்கையெனும் இளையகன்னி’ என்ற பாடலாகும். ஆனால் அது வெளிவரும் முன்பே எம்.ஜி.ஆர். நடித்த அடிமைப் பெண் திரைப்படத்தில் பாடிய ‘ஆயிரம் நிலவே வா’ பாடல் வெளிவந்தது.



பாலசுப்பிரமணியம் 1980 ஆம் ஆண்டு சங்கராபரணம் என்ற திரைப்படத்தின் மூலம் சர்வதேச அளவில் பலரின் கவனத்தைப்பெற்றார். இந்த படம் தெலுங்கு திரையுலகில் இருந்து வெளிவந்த சிறந்த படங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. கே. விஸ்வநாத் இயக்கியுள்ள இப்படத்தின் ஒலிப்பதிவு கே.வி. மகாதேவன், மற்றும் தெலுங்கு சினிமாவில் கர்நாடக இசையின் பயன்பாடு அதிகரிக்க வழி வகுத்தது.



ஹிந்தி படங்களில் அவரது முதல் படைப்பு அடுத்த ஆண்டில், ஏக் துஜே கே லியே (1981) இல் இருந்தது, இதற்காக அவர் சிறந்த ஆண் பின்னணி பாடகருக்கான மற்றொரு தேசிய திரைப்பட விருதைப் பெற்றார்.

பாலசுப்பிரமணியம் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் இசையமைப்பாளராக அறிமுகமான ரோஜா படத்தில் மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். இளையராஜா, ஹம்சலேகா, எம்.எஸ். விஸ்வநாதன் என தமிழ் சினிமா முன்னணி இசையமைப்பாளர் இசையமைத்த பல மெலோடி பாடல்களில் பாடியுள்ள இவர், பெரும்பாலும் ரஜினி போன்ற முன்னணி நடிகர்களின் அறிமுக பாடல்களை இவர் பாடியுள்ளார். இவருக்கு தமிழ் சினிமாவை தொடர்ந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி என பல மொழிகளில் பல ரசிகர்கள் உள்ளனர்.

உடல் நலக் குறைவு காரணமாக சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட எஸ்.பி.பாலசுப்பிரமணியம் சிகிச்சை பலனின்றி 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் 25 ஆம் திகதி உயிரிழந்தார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -


இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் - 197

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 501. தந்தை செல்வாவின் கருத்து என்ன?

அவர் நீதிமன்றின் தீர்ப்பையொட்டி பொதுத்தளத்தில் கருத்துக்கள் வைக்கவில்லை. ஆனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு “ஶ்ரீலங்காவில் இனி தமிழ் மக்கள் நாடாளுமன்றத்திலிருந்தோ, நிர்வாகத்திலிருந்தோ, நீதிமன்றுகளிடமிருந்தோ எந்தவித நீதியையும் எதிர்பார்க்க



தந்தை செல்வா

முடியாது. சோல்பரி அரசமைப்பின் கீழ் 29 ஆம் சரத்தையே ஆராய, நீதியை பார்க்க விரும்பாதவர்களிடமிருந்து எதை எதிர்பார்க்கலாம்?” - என்றார் அவர். அதுவே அவரது ஆதரவை வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு தந்தது.

றொய்ஸ் டி மெல் (Royce De Mal) மற்றும் ஏனையவர்களுக்கு எதிரான சதி புரட்சி வழக்கு என்ன அனுபவங்களை தந்தது?

இந்த இராணுவப் புரட்சி ஶ்ரீமாவோவின் அரசாங்கத்துக்கு எதிராக 27 ஜனவரி 1962 நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு, அதன் திட்டங்கள் கசிய விடப்பட்மையால் தோற்கடிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் குற்றம் சாட்டப்பட்டார்கள். அவர்களை விசாரிக்கவென குற்றவியல் சட்டத்தின் கீழ் விசேட சரத்துக்கள் கொண்டு வரப்பட்டு அது, 1962 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் என தீர்மானிக்கப்பட்டு, Trial at Bar முறையில் விசாரிக்கப்பட்டார்கள். பலர் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்கள். ஆயினும் மேல்நீதிமன்ற முறையீடுகளூடாக Privy Council குற்றவியல் சட்டத்தின் விசேட சரத்துக்கள் தங்களை தனிப்பட்ட ரீதியில் குற்றவாளிகளாக்குவதற்கே இயற்றப்பட்டன எனவும், அவை சோல்பரி சட்ட சரத்தின் 29 இற்கு மாறானவையானதால் தங்களுக்கு எதிரான குற்றத் தீர்ப்பு நீக்கப்பட வேண்டும் என வாதாடி வெற்றி பெற்றார்கள்.

அந்த வழக்கில் அந்தப் புரட்சியை ஏன் முன்னெடுத்தார்கள் என்பதற்கான சாட்சியமும், பின்னணியும், அதில் சம்பந்தப்பட்ட தமிழ் மக்களின் பாதுகாப்பும், அவற்றைஒட்டிய சிங்களத்தலைவர்களின் மனோபாவமும்தான் இதில் முக்கியமானவை. அந்த மனோபாவம் தொடர்ந்து, 2009 ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடத்தப்பட்ட அட்டூழியங்களில் வெளிப்படுத்தப்பட்டன.

இலங்கை சுதந்திரமடைந்தபோது அதனுடைய கட்டமைப்புக்களில் ஓரளவான சிங்கள பௌத்த மக்கள் இணைந்திருந்தாலும் மேலதிகாரிகளாக இருந்தவர்களில் ஐந்தில் மூன்று பகுதியினர் கிறிஸ்தவர்களாகவும் ஐந்தில் ஒரு பகுதியினர் தமிழர்களாகவும், ஐந்தில் ஒரு



சிறிமாவோவும் பீலிக்ஸும்

பகுதியினர் பறங்கியராகவும் இருந்தனர். ஆயினும் இராணுவ நெறிமுறையில் கட்டுப்பாடு கொண்டு, உத்தரவுகளை நடைமுறைப்படுத்தும் பணி காணப்பட்டது. 1958 இல் ஏற்பட்ட கலவரம் பரவாமல் இராணுவத்தினதோ பொலிஸாரினதோ தூண்டுதல் ஏதும் இல்லாமல் இரண்டு, மூன்று நாள்களிலேயே அடக்கப்பட்டதற்கு இந்த அதிகாரக் கட்டுப்பாடும், தரப்பட்ட உத்தரவுகளை அமுல்படுத்திய பணிவும் காரணமாக இருந்தன. அவர்களின் கடமை பொதுமக்களின் உயிர், உடைமைகளை பாதுகாப்பதாக இருந்தது.

பண்டாரநாயக்கா அங்கிலிக்கன் கிறிஸ்தவராகப் பிறந்து, வளர்ந்து, அரசியலுக்காகப் பௌத்தரானவர். அவர் இராணுவமும், பொலிஸும் பெரும்பான்மை இனத்தவரை பிரதிபலிக்க வேண்டும் என திட்டமிட்டமையால், அப்பொழுது பொலிஸ் மா அதிபராக (Inspector General of Police - IGP) ஒஸ்மண்ட் டி சில்வாவிடம் நியமனங்கள் பௌத்தர்களாக அமையவேண்டும் எனப்



பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா

பணித்தார். அது சட்டவிரோதமானது என அந்தக் கட்டளைக்கு அவர் பணிய மறுக்கவே அவரை கட்டாய ஓய்வில் அனுப்பி விட்டு, மூன்று மூத்த கிறிஸ்தவ அதிகாரிகளுக்கு மேலாக, வோல்டர் அபயகோன் என்பவரை பொலிஸ் முதன்மை உத்தியோகத்தராக நியமித்தார். அவருக்கு பொலிஸ் நிர்வாகத்தில் எந்தவித அனுபவமும் இருந்ததில்லை. காணித் தீர்வு பணிமனையில் இருந்தவர். ஆனால் பண்டாரநாயக்காவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். இதனால் பல மூத்த அதிகாரிகள் தங்களது பதவி விலகல் கடிதங்களைக் கொடுத்தார்கள். ஆனால் பின் ஏற்படுத்தப்பட்ட சமரசங்களில் அவர்கள் அதை வாபஸ்பெற்று பணியாற்ற இணங்கினாலும் உணர்வுகளும் உறவுகளும் முறிந்தே இருந்தன.

அப்படியிருக்க 1959 இல் பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்டு அவரது விதவை சிறிமாவோ, பிரதமராக பதவியேற்றார். அனுபவமற்றவராதலாலும் தனது கணவருக்கு நடந்தவற்றாலும் ஒரு பிராந்தியில் தன்னை சுற்றியுள்ளவர்களை ஒட்டி அவதானமாக இருந்தமை மட்டுமல்லாமல் தனக்கு நெருக்கமான



என்.கியூ.டயஸ்

சிலரிடமிருந்து பெற்ற அறிவுரைகளிலேயே நடந்தார். இவற்றில் பௌத்த மத பீடங்களின் செப்பலாட்டு வித்தைகளுக்கும் இடம் கொடுக்க வேண்டியவரானார்.

### 502. ஶ்ரீமாவோவின் அரசுக்குள் பௌத்த பீடங்களின் ஆதிக்கம் எவ்வாறு இருந்தது?

1956 இல் தனிச் சிங்கள சட்டத்தின் மூலம் தூண்டப்பட்ட சிங்கள உணர்வு வளர்ந்து நாடு சிங்கள, பௌத்த நாடாக அறியப்பட்டு, சிங்கள பௌத்தர்களுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற கோஷங்கள் ஆதிக்கம் பெற்றன. ஶ்ரீமாவோவின் நம்பகமாக இருந்த மந்திரிகளில் முக்கியமான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் என்.கியூ. டயஸும் பேரினவாதிகள். சிறுபான்மை மக்களுக்கு காலம் காலமாகப் பிரித்தானியாவின் காலனித்துவ காலங்களில் கிடைத்த சலுகைகள், அதிகாரங்கள் நீக்கப்பட்டோ அல்லது அதிகாரங்கள் குறைக்கப்பட்டோ, அவர்கள் சிங்கள பௌத்த மக்களுக்கு இரண்டாம் பட்சத்திலேயே வாழவேண்டும் என்ற கருத்தை வலுவாகக் கொண்டிருந்தனர். அதற்காக தேவையான, பலமான நடவடிக்கைகளை சமூக ரீதியாக



ஒஸ்மண்ட் டி சில்வா

எடுக்கக் கூடத் தயங்கப்போவதில்லை என்பதை பௌத்த பீடங்கள், அரசின் நன்மதிப்புக்களுக்காகத் தெரிவித்தனர்.

அதேசமயம் தனது தனிப்பட்ட பாதுகாப்புக்கள் பற்றி உத்தியோகபூர்வமாக ஒழுங்குபடுத்தப்படும் நடப்புகளிலே, அதனை நடைமுறைப்படுத்த தேர்வு செய்யப்படும் அதிகாரிகளில் நம்பிக்கையீனம் காரணமாக, தனது உறவினர் ரத்வத்தையின் மூலம் இவையை மேற்பார்வை செய்து வந்தார் சிறிமாவோ.

பொதுவாகவே அவரது அரசு தங்களது பாதுகாப்பு ஒட்டிய விடயங்களில் காலம் காலமாக இருந்து வந்த வழிமுறைகளை ஏற்றுக்கொள்ளாமல், தமக்கு நம்பிக்கையுள்ளவர்களின் தயவுகளோடு அதனை மேற்கொண்டு வந்தது. இவற்றால் அவரது அரசுக்கும் பொலிஸ் மற்றும் முப்படைத் தளபதிகள், உயரதிகாரிகள் மட்டத்தில் அதிருப்திகள் நிலவின.

இதனிடையில் பௌத்த பீடங்கள் நாட்டின் பாடசாலைகளெல்லாம் தனியார் கைகளிலிருந்து அரசாங்கத்தின் நிர்வாகத்துக்கு மாறவேண்டுமென்று போர்க்கொடிகள் தூக்கின.

(08ஆம் பக்கம் பார்க்க)



# பாட்டும் நானே? பாவமும் நானே!

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**




**1. கேள்வி:-** தமிழ் இளைஞர்கள் உயர்வு பெற இன்றைய நிலையில் எது வேண்டும்?(கல்வியா?, செல்வமா?, வீரமா?)

**பதில் :-** கல்வி, செல்வம், வீரம் என்பவற்றைவிட ஆளுமைதான் முக்கியம் என்று நினைக்கிறேன். பல தசாப்தங்களாய் எல்லோருக்கும் அடிமைப்பட்டு, அடிமைப்பட்டு வாழ்ந்து பழகிவிட்டதால் (இயக்கங்கள் உட்பட) சுயமிழந்து போய் நிற்கிறது நம் இளைய தலைமுறை. அதனால்தான் அவர்களிடம் ஆளுமைக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. நமது பிள்ளைகள் கல்வியிலும், செல்வத்திலும் எந்தக்குறையும் இல்லாமல்த்தான் இருக்கிறார்கள். வீரத்திற்கும் குறைவிருப்பதாய்த் தெரியவில்லை. (வாள்வெட்டுக் கூட்டத்தைச் சொல்லவில்லை.) இவ்வளவும் இருந்தும், நம் மண்ணைத் தாண்டிச் சென்றுவிட்டால், ஏதும் அற்றவர்கள் போல் அவர்கள் தம்மைத்தாமே தாழ்த்தி நிற்கிறார்கள். உள நிமிர்வின்மைதான் இதற்கான முதற்காரணம். மொழி அறிவின்மை அடுத்த காரணம். இவை இரண்டையும் நம் இளைஞர்களுக்கு ஊட்டிவிட்டால் நம் தமிழ் மண் பழைய பெருமையை மீண்டும் பெற்றுக் கொள்ளும் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ ஆளுமா டோலுமா ஆளுமா டோலுமா ஐசாலங்கடி மாலுமா ச்சும்மா.. ச்சும்மா.....**

**2. கேள்வி:-** தமிழினம் தொன்மையானது என்பது உண்மையா?

**பதில் :-** இல்லை. அது மிக மிகத் தொன்மையானது என்பதுதான் உண்மை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து...???"**

**3. கேள்வி:-** இணையப் பயன்பாடு நன்மையா? தீமையா? உங்கள் கருத்தென்ன?

**பதில்:-** பொதுப்பட இக்கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது என்று நினைக்கிறேன். எல்லா விடயங்களிலும் நன்மையும் தீமையும் கலந்துதான் இருக்கின்றன. உயர நினைக்கிறவர்கள் தீமையை விலக்கி நன்மையை மட்டும் பெற்றுக் கொள்வார்கள். இணையத்தின் கதையும் அதே கதைதான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ 'பக்கத்து வீட்டுத்தம்பி, அதற்குள் நல்லதும் இருக்கிறதா? என்று கேட்கிறான். ஹி..ஹி.."**

**4. கேள்வி:-** அமெரிக்காவின் அழைப்பின் பேரில் சுமந்திரன் குழுவினர் நம் ஈழத்தமிழர் பிரச்சினையை ஆராயச் சென்றிருப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** ஒரு பக்கம் மகிழ்ச்சியும்! மறுபக்கம் கவலையும்! தோன்றுகின்றன.

மகிழ்ச்சிக்கான காரணத்தை முதலில் சொல்கிறேன். உலக வரைபடத்தில் இலங்கை புள்ளியாய் நிற்கும் ஒரு சிறிய நாடு. அந்த நாட்டிற்குள் இருக்கும் இன்னொரு சிறிய புள்ளிதான் நம் ஈழத்தமிழினம். இந்தச் சிறிய கூட்டத்தை நாம் எது செய்தாலும் யார் கேட்கப் போகிறார்கள் எனும் துணிவில்த்தான் சிங்களப்பேரினவாதிகள் நம்மை அநியாயத்திற்கு நசுக்க முயன்றார்கள். அத்தகைய சிறிய தமிழினத்தின் பிரச்சினையைப் பற்றிப்பேச, உலகத்தின் முதன்மையான வல்லரசு என்று போற்றப்படும் அமெரிக்கா நம் தலைவர்களை அழைத்திருக்கிறது என்றால் மகிழாமல் எப்படி இருக்கமுடியும்? ஏற்கனவே வல்லரசுகளின் போட்டி

> **"சீன ட்ரகனைப் போலவே அமெரிக்கக் கழுகும் எதையும் விழுங்க வல்லதுதான். என்னதான் இருந்தாலும், இந்த இலங்கைதான் நம் சொந்தத்தேசம். இதனை நாம் என்றும் மறந்துவிடலாகாது."**

யில் "அல்லாடிக் கொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு இது பேரிடியான செய்திதான். உலகின் மிகப்பெரிய வல்லரசினது, ஈழத்தமிழர் மீதான அக்கறை எமக்கு மகிழ்ச்சியைத் தருவது நிஜமேயாம்.

இனிக் கவலைக்கான காரணத்தைச் சொல்கிறேன். உலகின் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் ஒரு மிகச் சிறிய நாட்டில் வாழும், ஒரு மிகச் சிறிய இனத்திற்கு, கைநீட்டும் அமெரிக்காவின் செயலில், நான் மனிதாபிமானத்தை மட்டும் பார்க்கவில்லை. அதற்குள் பல "சூத்திரங்கள் அடங்கியிருப்பதாகவே தோன்றுகிறது. இறுதிப்போரில் துடிக்கத் துடிக்க ஆயிரக்கணக்கானோர் இங்கு இறந்து கொண்டிருந்த போது மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்காவிற்கு, எம் மீது ஏற்பட்டிருக்கும் திடீர்ப்பாசம் மகிழ்ச்சிக்குப் பதிலாய் கவலையே தருகின்றது.

அமெரிக்கா மட்டுமல்ல, உலகின் வல்லரசுகள் அனைத்துமே கழுகுகள்தான். அவை ஏதோ ஒன்றின் மீது அக்கறை காட்டுகின்றன என்றால், அது அவற்றின் சுயநலத்தின் வெளிப்பாடாய்த்தான் இருக்கும் என்பதில் எந்த ஐயத்திற்கும் இடமில்லை. தமது இலாபம் நோக்கித் திடீரென ஒன்றைப் பற்றுதற்கும், திடீரென ஒன்றைக் கைவிடுவதற்கும் அவை என்றும் தயங்கா. அதனால் ஆழ்ந்து சிந்திக்க அமெரிக்காவின் எம் மீதான அக்கறை, மகிழ்ச்சிக்கப்பால் அச்சத்தைத்தான் ஊட்டுகிறது.

பதில் நீள்வது தெரிகிறது. ஆனாலும் முக்கியமான ஒன்றைச் சொல்லித்தான் பதிலை முடிக்கவேண்டும் என்று நினைக்கிறேன். பல்லாண்டுகளாய் நம் அருகில் உறவோடு வாழ்ந்த சிங்களவர்கள் தேவையின்றி எம் இனத்தைப் பகைக்கப்போய், இன்று தம் மண்ணை வல்லரசுகளுக்குக் கூறுபோட்டு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். கைதூக்கிவிடும் என்று அவர்கள் நினைத்த சீனா, இன்று தேசத்தின் இறையாண்மையைக் கைப்பற்ற நினைத்து நிற்கிறது. ஏதும் செய்ய முடியாத நிலையில் இன்று நம் சிங்கள அரசு தடுமாறுகிறது. இதே நிலை நாளை நமக்கும் ஏற்படலாம். சீன ட்ரகனைப் போலவே அமெரிக்கக் கழுகும் எதையும் விழுங்க வல்லதுதான். என்னதான் இருந்தாலும், இந்த இலங்கைதான் நம் சொந்தத்தேசம். இதனை நாம் என்றும் மறந்துவிடலாகாது. இத்தேசத்தை எக்காரணம் கொண்டும் நாம் வேற்றவருக்கு விட்டுக்கொடுத்துவிடக் கூடாது. சிங்களவர்கள் செய்த முட்டாள்த்தனத்தை அறிவாளிகள் என்று சொல்லிக்கொள்ளும் தமிழர்களும் செய்தலாகாது. அமெரிக்காவின் உதவியைப் பெற்று நம் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயலும் அதேவேளை நம் இலங்கைத் தேசத்தின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதும் நம் கடமையாகும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ வாரிதியார், உண்மையைச் சொல்லிப் பலரிடம் அடிவாங்கப்போகிறா**

> **"தற்போதைய அரசைப் பல விடயங்களாலும் வெறுத்துக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் சிங்கள மக்களை, 'ஒரே நாடு:ஒரே அரசு' என்ற 'காவடி ஆட்டத்தால்' கவரலாம் என்று மீண்டும் தப்புக் கணக்குப் போடுகிறார்கள் ஆட்சியாளர்கள்."**

**ருங்கோ...!**

**5. கேள்வி:-** ஒரே நாடு, ஒரே சட்டம் என்று, நம் இலங்கை அரசு தூக்கியிருக்கும் புதிய "காவடியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** புதிய காவடி என்று சரியாய்ச் சொன்னீர்கள்! தற்போதைய அரசைப் பல விடயங்களாலும் வெறுத்துக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் சிங்கள மக்களை, இந்தக் "காவடி ஆட்டத்தால்" கவரலாம் என்று மீண்டும் தப்புக் கணக்குப் போடுகிறார்கள் ஆட்சியாளர்கள். வேறுபட்ட மொழிகள் பேசுகின்ற, வேறுபட்ட மதங்களைச் சார்ந்த மக்கள் வாழுகின்ற நாடு இது. ஒவ்வொருவரும் தத்தமக்கெனத் தனிப்பட்ட கலாசாரம், பண்பாடு, வாழ்க்கைமுறை என்பவற்றைக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் அனைவரையும் "ஒரே கூட்டிற்குள் அடைத்து ஒன்றாக்க நினைப்பது தவறு!" புலியையும் பூனையையும் ஒரே கூட்டிற்குள் அடைத்து வைத்தல் கூடுமா? இந்நாட்டு மக்கள் அனைவரும் தத்தம் அடையாளத்தோடு வாழவேண்டுமானால், சட்டத்தில் சில பாகுபாடுகள் இருப்பது தவிர்க்க முடியாதது. அதனை மாற்ற நினைப்பது முட்டாள்தனம். அப்படி மாற்றினால் இந்த நாட்டில் இன்னும் இனவேறுபாடுகள்தான் வெடிக்கும். இவர்களுக்கு நாட்டு மக்களை ஒன்றாக்கும் எண்ணம் இல்லை என்பது அவர்கள் அமைத்த குழுவிலிருந்தே தெரிகிறது. தீர்க்க வேண்டிய பிரச்சினை ஆயிரம் இருக்கத் தேவையில்லாத பிரச்சினைகளை மீண்டும் மீண்டும் தொடுகிறார்கள். "விநாசகாலே விபரீத புத்தி" என்பது இதனைத்தான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ யுவர் ஆனர் முதலில் இருக்கிற சட்டத்தை மதிக்கப் பழகட்டும். பின் மாற்றுவது பற்றிச் சிந்திக்கலாம்.**

**6. கேள்வி:-** கூட்டமைப்பினர், மாவையாரை மீண்டும் எம்.பி. ஆக்கப் போகிறார்களாமே?

**பதில் :-** அசையாமல் நிற்கும் தேரை அசைக்கப் புது வழி கண்டுபிடித்திருக்கிறார்கள் போல. சம்பந்தனுக்குப் பிறகு கூட்டமைப்பின் தலைவராக சுமந்திரன் வரவேண்டுமானால், ஒன்றிணைந்த கட்சிகளின்

> **"மீண்டும் மாவை எம்.பி. ஆக்கப் போகிறார்களாமே? அசையாமல் நிற்கும் தேரை அசைக்கப் புது வழி கண்டுபிடித்திருக்கிறார்கள் போல..!"**

ஏதோ ஒன்றின் தலைவராக அவர் இருத்தல் அவசியம் என்கிறார்கள். அப்படி அவர் வருவதானால் தமிழரசுக்கட்சியின் தலைவராகத்தான் வரவேண்டும். தேர்தலிலும் தோற்றிருக்கும் இன்றைய நிலையில் எஞ்சியதாய்த் தான் கையில் வைத்திருக்கும் அத் தலைவர் பதவியை விட்டுக்கொடுக்க மாவையார் ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார் எனும் உண்மையைத் தெரிந்து, அவரின் "உடும்புப்பிடியைத்" தளர்த்துவிக்கப் புது வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் போல் தெரிகிறது.

பதவிகளைப் பற்றிக் கவலைப்படாமல் வெறுமனே இனநலம் நோக்கிச் செயற்பட நம் தலைவர்கள் போராளிகளா என்ன? அதனால்தான் இந்தப் பேரம் நடக்கத் தொடங்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். வெட்கமாக இருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ "பதவிப் பண்டமாற்று"த் தொடங்கிவிட்டது போல.**

**7. கேள்வி:-** உங்களை வைஷ்ணவர் என்று சிலர் சொல்கிறார்களே?

**பதில் :-** அப்படியா? அதை ஒத்துக் கொள்வதில் எனக்கு ஒன்றும் பிரச்சினையில்லை. ஆனால் ஒன்று, அப்படிச் சொல்கிறவர்கள் உலகில் வேறெங்கேனும் திருநீறு பூசுகிற ஒரு வைஷ்ணவனைக் காட்ட வேண்டும்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த இரண்டரை வருடங்களுக்கு எமது இந்த அரசை வீழ்த்தமுடியாது

## நாமல் ராஜபக்ஷ ஆருடம்



கொழும்பு, நவ. 20

'இந்த அரசாங்கத்தை அடுத்த இரண்டரை வருடங்களுக்கு வீழ்த்த முடியாது' என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்

வீதிகளில் எத்தனை ஆர்ப்பாட்டங்களைச் செய்தாலும் , தீர்மானங்களை எடுப்பது நாடாளுமன்றம் என்றால் நாடாளுமன்றில் அது தொடர்பில் பேசுங்கள். இந்த அரசாங்கத்தை இரண்டரை வருடங்களுக்கு வீழ்த்த முடியாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு அடுத்த வாரத்தோடு 2 வருடங்கள் நிறைவடைகின்றதுன. இன்னும் ஒன்றரை வருடங்கள் வரை அவர்களே கொண்டுவந்த அரசமைப்பின் படி அரசாங்கத்தை எப்படியும் கலைக்க முடியாது.

கடந்த காலங்களில் ஒரு வருடத்தில் அரசாங்கத்தைக் கலைக்க ஜனாதிபதிக்கு முடியும். அந்த முறையை நல்லாட்சி அரசாங்கம் 5 வருடங்களாகியது. பின்னர் எமது அரசாங்கத்தில் அதனை இரண்டரை வருடங்களாக மாற்றியமைத்தோம்.

அப்படியென்றால் அரசாங்கத்தை வீழ்த்த முடியாவிட்டால் ஏன் வீதிக்கு இறங்கி கொரோனாவை பரப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இந்த ஆர்ப்பாட்டங்களின் இறுதி பிரதிபலன் என்ன? இந்த ஆர்ப்பாட்டங்கள் இறுதி பிரதிபலன் தான் கொரோனா 4ஆவது அலையை உருவாக்குவது. வேறு எந்தக் காரணமும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

## இனப் படுகொலையும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது ஏனோ கத் தோலிக்கர்களுக்கு எதிராக முனைப்புடன் முடுக்கிவிடப்பட்டு கத்தோலிக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள் (Catholic Action) எனத் தென்னிலங்கையில் பரவலாக்கப்பட்டது. கத்தோலிக்க குருபீடங்கள் இதனை எதிர்த்து பாடசாலைகளின் முன்னர் மறியல் போராட்டங்களில் ஈடுபட, அதே பாடசாலை முன்றிலில் பௌத்த குருமாரும், சிங்கள மக்களும் எதிர்மறியல் செய்ய, அவற்றில் ஏற்பட்ட தர்க்கங்களை நிர்வகிக்க பொலிஸாரின் பல மணித்தியால நேரங்கள் பாடசாலைகளின் முன் செயற்படுகின்றார்கள் என்றும் அவர்கள் அதனால் அரசியல்மயப்படுகின்றார்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டது. அரசோ இவை பௌத்தரல்லாத மற்ற இன,மத மேலதிகாரிகளிடம் இருந்து வருகின்றன எனவும், பௌத்த,சிங்கள மக்களின் முன்னேற்றங்களை தடுப்பதே இந்த மேலதிகாரிகளின் நோக்கம் எனவும் திரித்தது.

பள்ளிக்கூட விவகாரங்கள் இப்படி தென்னிலங்கையில் மும்முரம் பெற, அங்கிலிக்கன் திருச்சபையின் பள்ளிக்கூடங்களில் பெருத்த அக்கறை காட்டாது, கத்தோலிக்கப் பள்ளிக்கூடங்கள் கையளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துக் கொண்டு வந்தது.

அந்தக் காலங்களில் அரசாங்கத்துக்கு வடக்கு,கிழக்கிலிருந்த தமிழ் தலைவர்களாலும் தொந்தரவுகள் உண்டாக்கப்பட்டன. 1961 இல் நடத்தப்பட்ட சத்தியகிரகத்தால் வடக்கு,கிழக்கின் கச்சேரிகள் செயலிழந்தன. அதன் ஒரு முன்னெடுப்பாக தமிழரசுக் கட்சியினர் தமது "தமிழரசு" முத்திரைகளை வெளியிட்டு அரசுக்கு சவாலிட்டார்கள்.

(வளரும்......)

## ஹாட்லி மைந்தர்களது 22ஆம் ஆண்டு நினைவு!

### வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அனுஷ்டிப்பு





ஹாட்லியின் மைந்தர்களது 22ஆம் ஆண்டு நினைவு நாள் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் உணர்வு பூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

கல்விச் செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த யாழ். ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நான்கு பேரின் 22 ஆவது ஆண்டு, மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாகக் கல்வி கற்றுவந்த வேளை ரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவனது 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு என்பன கடந்த புதன்கிழமை காலை 9 மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 17.11.1999 அன்று கடலோடு கடலாக சங்கமித்திருந்த, பூரணமூர்த்தி கந்தர்வன், சிவநாதன் இரவிசங்கர், சுந்தரலிங்கம் சிவோத்தமன் மற்றும் பாலகிருஸ்ணன் பிரதீபன் ஆகியோருடன் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக இருந்த பொழுதில் 17.05.2004 அன்று இடம்பெற்ற ரயில் விபத்தில் சிக்கி சாவடைந்திருந்த மரியரட்ணம் குணரட்ணம் ஆகியோரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஒன்றிணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்வை நடத்தினர். இதேவேளை இந்த மாணவர்களது நினைவாக குருதிக்கொடை முகாமும் ஹாட்லி கல்லூரியில் நடைபெற்றது.

உயிரிழந்த மாணவர்களுடன் சமகாலத்தில் கல்விபயின்ற நண்பர்கள் ஒன்றிணைந்து 13 ஆவது ஆண்டாக முன்னெடுத்த இந்த நிகழ்வு ஹாட்லி கல்லூரியில் புதன்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது. இந்தக் குருதிக் கொடை முகாமில் ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் இரத்த தானம் செய்தனர்.

## முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ்க்கு அமெரிக்காவின் அதியுயர் விருது கௌரவம்

கொழும்பு, நவ. 20

முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்கவிற்கு அமெரிக்காவின் அதி உயர் விருது வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ கல்லூரியின் அதி உயர் கௌரவிப்பு பெறுவோர் பட்டியலில் மகேஷ் சேனாநாயக்க உள்வாங்கப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவத் தளபதி ஒருவருக்கு இந்த அதி உயர் விருது வழங்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இது வென்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க இராணுவக் கல்லூரியில் கற்று அந்தந்த நாடுகளின் இராணுவத்தில் மிகச் சிறந்த சேவையை வழங்கிய படையதிகாரிகளைக் கௌரவப்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கில் இந்த United States Army Command and General Staff College International Hall of Fame விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாட்டும் நானே? ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னைப் பொறுத்தவரை சமயம் என்பது கடவுளோடு நான் தொடர்புகொள்ள வழிசெய்யும் ஊடகம் மட்டுமே. ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இருக்கும் தொடர்பு போல அது எனக்கும் இறைவனுக்குமான தனித்தொடர்பு. அதனை மற்றவர்களுக்கு நிரூபிக்க வேண்டிய தேவையேதும் எனக்கில்லை. ஒரு மனைவியின் கற்பு கணவனுக்கு மட்டும் தெரிந்தால்போதும் என்று நினைக்கிறேன். நான் சைவனா? வைஷ்ணவனா? என்பதைச் சிவன் நன்கு அறிவார் என்று நினைக்கிறேன். அதனால் மற்ற முட்டாள்கள் சொல்லும் கருத்துப் பற்றி எனக்குக் கவலையில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ∗ "அப்படிப் போடு அரிவாளை!"**

**8. கேள்வி:-** சொற்களின் பெறுமதி எதில் தங்கியிருக்கிறது?

**பதில் :-** சொல்லப்படும் வார்த்தைகளின் சத்தியத்தில்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ∗ சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா! வெல்லடா!**

**9. கேள்வி:-** அடைமழை எப்படி?

**பதில் :-** நம் தேசத்தின் நிலையைப் பார்த்து வானமும் அழுவது போல் தெரிகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ∗ சூப்பர்! கம்பற்ற ஆளுக்குக் கற்பனைக்குப் பஞ்சமா என்ன?**

## வெள்ள நிவாரண உதவி





யாழ்ப்பாணம், நவ.20

கோண்டாவில் மேற்கு, நந்தாவில் ஜே /116 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் மக்களின் வறுமை மற்றும் அண்மையில் ஏற்பட்ட தொடர் மழை நிலைமைகளை கருத்தில் கொண்டு, பூமணி அம்மா அறக்கட்டளையினரால் நேற்று வெள்ளிக்கிழமை ஒருதொகுதி உலருணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அப் பகுதியில் வசிக்கும் 30 குடும்பங்களுக்கு பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபக தலைவரும் சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸ் (ITR) பணிப்பாளருமான சரவணையூர் விசு செல்வராசாவின் நெறிப்படுத்தலில் அறக்கட்டளையின் இலங்கை நிர்வாகிகளான தலைவர் நா.தனேந்திரன்,செயலாளர் ந.விந்தன் கனகரட்ணம், அறக்கட்டளையின் நிர்வாக சபை உறுப்பினர்களான இ.மயில்வாகனம், Dr H.சத்தியா, ஜே/116 பிரிவு கிராமசேவகர் ஆகியோரால் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானத்தைப் பெறும் வறிய குடும்பங்களுக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் உலர் உணவு நிவாரணப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir

## அமெ.பாதுகாப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெள்ளை மாளிகையை ஒட்டி கடந்த புதன்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெற்றதாக அறிவருகின்றது.

இந்தச் பேச்சில் சம்பந்தப்பட்ட அமெரிக்கத் தரப்பில் இருந்து சந்திப்புப் பற்றிய செய்திகள், படங்கள் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டமையால், சந்திப்பு நடந்து 36 மணி நேரம் கடந்தும் அது பற்றிய தகவல் ஏதும் தமிழர் தரப்பில் இருந்து வெளியிடப்படவில்லை என அறியவந்தது.

எனினும், வேறு வட்டாரங்கள் மூலம் சந்திப்பு நடந்தமை பற்றிய விவரம் காலைக்கதிருக்குக் கிடைத்தது.

இந்தச் சந்திப்புகளில் பங்குபற்றிய வர்களில் ஒருவர் வெள்ளை மாறிகையில், ஜனாதிபதி ஜோ பைடனின் கீழ் இயங்கும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலின் தெற்காசிய பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பான இயக்குநர் பெற் லார்ஸன் (Pete Larsen). மற்றையவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் விசேட உதவியாளர் றொபேர்ட் ஜி பெர்ஷ்சிச்ன்ஸ்கி (Robert G. Berschinski). அத்தோடு அவர் அமெரிக்க தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் விடயங்களுக்கான சிரேஷ்ட இயக்குநர் ஆவார்.

இவர்களோடு சுமந்திரன் தலைமையிலான தமிழ்ப் பிரதிநிதிகள் பேசிய விடயங்கள் இப்போதைக்கு வெளியே வருமோ தெரியவில்லை.

இந்தச் சந்திப்பு வெள்ளை மாளிகையில் நடப்பதாக இருந்தது. எனினும் கொரொனாத் தொற்று எச்சரிக்கையை முன்னிட்டு, வெள்ளை மாளிகையை ஒட்டிய கட்டடம் ஒன்றில் அது நடந்தது.

மேற்படி சந்திப்பை முடித்துக் கொண்டு புதனிரவு நியூயோர்க் சென்ற சுமந்திரன் குழுவினர், அங்கு இரண்டு நாள்கள் ஐ.நாவுடன் தொடர்புபட்ட அமெரிக்க மற்றும் பிறநாட்டு பிரமுகர்களுடனும் ஐ.நா. அதிகாரிகளுடனும் பேச்சில் ஈடுபட்டனர்.

வெள்ளி இரவு அவர்கள் கனடா புறப்பட்டனர். இன்றும் நாளையும் சுமந்திரன் கனடாவில் தமிழர் தரப்புகளுடன் சந்திப்புகளில் ஈடுபடுகின்றார். அவருடன் சாணக்கியன் எம்.பியும் இணைந்து கொள்கின்றார்.

மீண்டும் திங்கள் காலையில் வொஷிங்டனைச் சென்றடையும் சுமந்திரனும் ஏனைய பிரதிநிதிகள் எண்மரும் அங்கு அமெரிக்கத் தரப்பில் உயர்மட்ட அதிகாரி ஒருவரைச் சந்தித்து இந்த அமெரிக்கப் பயணத்தின் இறுதிப் பேச்சுகளில் ஈடுபடுவர்.

அதன் பின்னர் அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை கனடாவின் ஒட்டாவா நகரில் கனேடிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடனும் –

அதன் பின் இரண்டு நாள்கள் கழித்து செவ்வாய்க்கிழமை லண்டனில் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடனும் –

சுமந்திரன் – சாணக்கியன் இணை பேச்சுக்களில் ஈடுபடவிருக்கின்றமை தெரிந்ததே. (உ)


**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


## பாதுகாப்பு அமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புமீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருள்களின் விலை உயர்வால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் மேலும் உயரும் என எதிர்வு கூறப்படுகின்றது. இதனைத் தடுப்பதற்கான வல்லமை இந்த அரசிடம் இல்லை.

இந்நிலையில், இராணுவத்துக்கு பல கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நாடு வறுமையில் சிக்கித்தவிக்கையில் எதற்கு இராணுவத்துக்கு அதிக நிதி? இராணுவ ஆட்சியை ஏற்படுத்தவா இவ்வாறு அதிக நிதி ஒதுக்கப்படுகின்றது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டு விட்டனர் எனக் கூறப்படுகின்றது. எனவே, யாருடன் போரிடப்போகின்றீர்கள்? பாகிஸ்தானுடனா, இந்தியாவுடனா அல்லது தமிழர்களுடனா என்ற கேள்வியும் எழுகின்றது – என்றார்.

## மக்கள் அணிதிரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசிடம் 150, 130, 140 பெரும்பான்மை இருக்கலாம். விமல் விரவன்ஸ சென்றால் 135 இருக்கும். தயாசிறி ஜயசேகர சென்றால் 127 இருக்கலாம். 127 உறுப்பினர்களையும் பார்க்க மக்களின் எதிர்ப்பு பலமானது. அவர்கள் அணிதிரளும்போது அனைத்தையும் சுருட்டிக்கொண்டு அமெரிக்காவுக்குச் செல்ல நேரிடும்.

கடந்த நல்லாட்சி அரசில் பொய்யான எவ்.சி.ஐ.டி ஒன்றை நியமித்து அப்போது எதிர்த் தரப்பிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறைப்பிடித்தார்கள். அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவையும் சிறைப்பிடித்தார்கள். பல்வேறு சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்தார்கள். சிறையிலிருக்கும்போது அவரை நானும் நேரில் சென்று சந்தித்திருந்தேன். ஆகவே அவரின் மனதில் கட்டாயம் வைராக்கியம் இருக்கும்.

எது, எவ்வாறாக இருந்தாலும் நான் மைத்திரிபால சிறிசேனவிடமும் செல்லவில்லை. ரணில் விக்கிரமசிங்கவிடமும் செல்லவில்லை. பணம் செலவானாலும் என் மீது தாக்கல் செய்யப்பட்ட சகல வழக்குகளையும் தைரியமாக எதிர்கொண்டேன். ஆனால், தற்போதுள்ளவர்கள் பயங் கொண்டவர்கள். தற்போதுள்ளவர்கள் வெளியில் சென்று ஒன்றைக் கூறுகிறார்கள். மறுபுறம் பொலிஸார் கைதுசெய்ய வருகின்றார்கள் என்கிறார்கள். பின்னர் வைத்தியசாலையில் சென்று அமர்ந்து கொள்கிறார்கள். அப்படியான வர்களே தற்போது இருக்கிறார்கள். பெயர் குறிப்பிட மாட்டேன். காரணம் எதிர்காலத்தில் அவர்கள் எனக்குத் தேவைப்படலாம். மக்கள் இந்த அரசுக்குச் சாபம் விடுகின்றனர் – என்றார்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடு தயாராகவேண்டும் என்று சீன அரசு கடந்த வாரம் அறிவித்தது.

சிறிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடு என்ற வகையில் இலங்கையும் ஆபத்தில் இருக்கின்றது.

எனவே, இதுபோன்ற தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க, உணவு வழங்கல் மற்றும் அதிக பொறுப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

## இலண்டனில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

எனினும், வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதற்கு முன்பே அவர் உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் உறுதி செய்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவருக்கு மேற்கொண்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# பட்ஜட் முடிவடைந்த பின்னர் அமைச்சரவையில் மாற்றம்

## கோட்டாபய யோசனை



வரவு – செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்த பின்னர், அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி சில அமைச்சுகள் கைமாறவுள்ள துடன், மேலும் சில அமைச்சுகளுடன் புதிய விடயதானங்கள் இணைக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன எனக் கூறப்படுகின்றது.

அரச நிறுவனங்களின் உயர் பதவிகளிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தவும் ஜனாதிபதி உத்தேசித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர்களான ரொஷான் ரணசிங்க, சனத்நிஷாந்த ஆகிய இருவரும் அமைச்சரவைக்கு உள்வாங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படு கின்றது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதம் எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொம்மைவெளியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண் சிக்கினார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.பொம்மைவெளியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் பிரதான சந்தேக நபரான பெண் ஒருவர் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் போதைப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொம்மைபெளிப் பகுதியில் நீண்டகாலமாகப் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தார் எனக் கூறப்படும் பிரதான சந்தேகநபரான 38 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் போதைத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் குறித்த பெண் வியாழன் இரவு சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 2.40 கிராம் ஹெரோயின் பொலிஸாரால் மீட்கப்பட்டது. குறித்த பெண் பல போதைப்பொருள் வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவர் என்பதுடன் ஏற்கனவே மேல் நீதிமன்ற வழக்கில் மேல் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டவர் என்பதுடன் பிணையில் உள்ள நிலையிலும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றார் எனக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மேற்படி பொலிஸ் குழுவினரால் யாழில் பிரதான போதைப் பொருள் சூத்திரதாரிகள் தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த வவுனியா வடக்கு பிரதேச சபையின் பாதீடு தோல்வி!

(வவுனியா நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான பாதீடு தோல்வியடைந்துள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு தவிசாளர் சு.தணிகால சத்தால் சபையில் நேற்று முன்வைக்கப்பட்டது. இதையடுத்து பாதீடு தொடர்பில் உறுப்பினர்களின் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து பாதீடு சபையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது 26 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்கள் மட்டும் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 4 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் 3 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் 3 உறுப்பினர்களும், சுயேச்சைச் குழுவின் ஒரு உறுப்பினரும் என 15 பேர் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தனர். இதனால் மேலதிக 8 வாக்குகளால் பாதீடு தோல்வியடைந்தது.

வாக்கெடுப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினர் நடுநிலைமை வகித்தமையுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினர் வீதம் மூவர் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

# கொரோனாத் தொற்றால் பருத்தித்துறையில் வயோதிபர் மரணம்

யாழ்., பருத்தித்துறையைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

குறித்த வயோதிபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே உயிரிழந்த வயோதிபருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசித்து வந்த 74 வயதுடைய எம்.சிவசுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று மருத்துவ அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலாத்துறையை விருத்தி செய்யும் நோக்கில் யாழை மையமாகக் கொண்ட கடல்வழி பயண சேவை

(கலையமுதன்)

சுற்றுலாத்துறையை விருத்தி செய்யும் நோக்கில் இதுவரை காலமும் இல்லாத கடல்வழி பயண சேவையொன்று யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து ஆரம்பிக்கப்படவுள்ளது. எட்டுப் பேர் தங்கக்கூடிய நான்கு அறைகளைக் கொண்ட பாய்க்கப்பல் வடிவிலான இயந்திரக் கப்பலில்ஒருநாள் மற்றும் சிலநாள்கள் கடலில் பயணிக்கக் கூடிய வகையில் இந்த சேவை பரீட்சார்த்தமாக டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடக சந்திப்பு யாழ். ஊடக அமையத்தில் கடந்த வியாழக்கிழமை மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த தொழிலதிபர் சுப்பிரமணியன் மனோகரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காரைநகரில் இருந்து இதனை இந்த மாதத்தில் ஆரம்பிக்க இருந்தோம். கால நிலை காலநிலை மாற்றம் காரண மாக டிசெம்பர் மாதம் 5ஆம்திகதியிலிருந்து டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கவுள்ளோம்.

இதன் மூலம் அந்நியச் செலாவணி அதிகரித்து நாட்டுக்கு வருமானம் ஈட்டப்படுவதுடன் உள்ளூர் வாசிகளும் பயன்பெறுவர். என்றார்.



# புரோட்லண்ட் நீர் மின் திட்டத்தின் சுரங்கப்பாதைக்கு நீர் நிரப்பும் நிகழ்வு

## பிரதமர் தலைமையில் நடந்தது

லக்ஷபான வளாகத்தின் இறுதி நீர் மின் உற்பத்தி நிலையமான புரோட்லண்ட் நீர் மின் திட்டத்தின் பிரதான சுரங்கப்பாதைக்கு நீர் நிரப்பும் ஆரம்ப நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு கொழும்பு அலரி மாளிகையில் இணையவழி ஊடாக இடம்பெற்றது.

மஸ்கெலியா ஓயாவின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள அணைக்கட்டிலிருந்து கிதுல்கல கலுகொஹதென்னே அமைந்துள்ள மின் நிலையம் வரை 3.5 கிலோமீற்றர் நீளத்திற்கு இந்த சுரங்கப்பாதை ஊடாக நீர் கொண்டு செல்லப்பட்டு தேசிய மின் கட்டமைப்பில் வருடாந்தம் இணைக்கப்படும் மின் உற்பத்தி கிகாவொட் 126 மணித்தியாலங்களாகும்.

இந்தத் திட்டத்துக்கான மொத்த மதிப்பீட்டு செலவு 9.7 கோடி அமெரிக்க டொலராகும்.

இந்தத் திட்டத்துக்கு சீன தொழிற்துறை மற்றும் வணிக வங்கி மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி ஆகியன நிதிப் பங்களிப்பு வழங்கியுள்ளன.

இந்த நிகழ்வில் மின்சக்தி அமைச்சர் காமினி லொகுகே, நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.



ஏ.எம்.அலி சப்றி, இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க, பிரதமரின் ஒருங்கிணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான், இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் பொறியியலாளர் எம்.ஆர்.ரணதுங்க, பிரதி பொது முகாமையாளர் பொறியியலாளர் நொயெல் பிரியந்த, திட்ட பணிப்பாளர் எச்.எம்.விஜேகோன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மனித பாவனைக்குதவாத உணவுப்பொருள் விற்பனை

மட்டக்களப்பு சுகாதார வைத் தியதிகாரி பிரி வில் மனித பாவனைக்கு தவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்த 4 வர்த்தக நிலையங்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக கோட்டைமுனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்துள்ளார்.

குறித்த வர்த்தக நிலையங்களில் இருந்து சுமார் 100 கிலோ மனித பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் கடந்த வியாழக்கிழமை காலை முதல் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பொதுச் சந்தை உட்பட நகரிலுள்ள பேக்கரிகள், சில்லறை கடைகள், ஹோட்டல்கள், மரக்கறிக் கடைகள் உட்பட 16 கடைகளில் தேடுதல் நடத்திய போது 4 வர்த்தகர்கள் மாட்டினர் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

# மருத்துவ கருத்தமர்வு

வடக்கு மாகாண கல்வியமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சூம் செயலி ஊடான ‘யாவர்க்கும் நலம்’ எனும் கருத்தமர்வானது பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி முதல் 9 மணி வரை இடம்பெறவுள்ளது.

இன்று “உடற்பருமனும் பாதிப்புக்களும்” எனும் தலைப்பில் கருத்தமர்வானது இடம்பெறவுள்ளது.

Meeting ID- 89985282023
Passcode - 354485

# பங்களாதேஷ் பிரதமரை சந்தித்தார் இலங்கை வெளிவிவகார அமைச்சர்



பங்களாதேஷுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீ னவை சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாகப் பேச்சு நடத்தினார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

டாக்காவில் உள்ள பிரதமர் ஹசீனாவின் செயலகத்தில் இந்த பேச்சு நடைபெற்றுள்ளது. கொவிட்19 தொற்று நோயை கட்டுப்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள வெற்றி மற்றும் இலங்கையில் தற்போது நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக வெளி விவகார அமைச்சர், பங்களாதேஷ் பிரத மருக்கு விளக்கியுள்ளார்.

ஏற்கனவே உத்தியோகபூர்வ மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை உடன்படிக்கை வரை கொண்டு செல்வது தொடர்பான முன்னேற்றம் மற்றும் கடற்துறை சம்பந்தமான விடயங்களில் ஒத்துழைப்புகள் தொடர்பாகவும் இதன்போது கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை விரிவான டிஜிற்றல்மய வேலைத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கத் தமது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக பங்களாதேஷ் பிரதமர், வெளிவிவகார அமைச்சரிடம் விவரித்துள்ளார்.

கொழும்பு டாக்கா இடையிலான விமான சேவைகளை முன்னேற்றுவது மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்து சமுத்திர நாடுகள் சங்கத்தின் உப தலைவர் பதவியை பொறுப்பேற்பதற்கான அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த திங்கட்கிழமை டாக்காவுக்கு சென்றார்.

இலங்கை அண்மையில் பங்களாதேஷிடம் 20 கோடி டொலர்களைக் கடனுதவியாக கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் ஐவர் சிக்கினர்

பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் ஹெரோயினுடன் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அய்லப்பெரும பிரதேசத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 12 கிராம் 68 மில்லிகிராம் ஹெரோயினுடன் கோரகஹவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாதம்மாவத்தை, தொட்டலங்க ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட இரு சுற்றிவளைப்புகளில் 17 கிராம் ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருகொடவத்த, கொழும்பு 14 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22, 31 வயதுடைய இருவரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்கல்பிட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 07 கிராம் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா, துன்கல்பிட்டிய பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 07 கிராம் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

# யாழ். இந்திய துணைத் தூதரகம் ஏற்பாட்டில் இரத்த தான முகாம்

யாழ். இந்தியத் துணைத் தூதரகம் ‘ஆசாதி கா அம்ரித் மஹோற்சவ்’ கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, யாழ். வாலிப கிறிஸ்தவ சங்கத்தினருடன்இணைந்து, கடந்த வியாழக்கிழமை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இரத்த தான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்வை இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், வை.எம்.சி.ஏ, தலைவர் ஆர். வினோத், யாழ்ப்பாணம் சிட்டி மிஷன் தேவாலயத்தின் தலைவர் அருட்தந்தை அந்தோணி சுதாகர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரதி அதிபர் அருட்தந்தை தேவமித்திரன் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஸ்ரீ ஜெயபாஸ்கரன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்.நகர முதல்வர் வி.மணிவண்ணன் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார். இந்தியத் துணைத் தூதுவர் மற்றும் இந்தியத் தூதரகத்தின் 10 அதிகாரிகள் உட்பட 22 தன்னார்வலர்கள் இரத்த தானம் செய்தனர்.

இந்திய சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம் ஏற்பாடு செய்துவரும் தொடர் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

யாழ்.இந்திய துணைத் தூதரகம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலும் இரத்த தான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A
பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.11.2021 இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆள்காட்டிவெளி மாவீரர் இல்லத்தின் பொதுச்சுடர் ஏற்றும் பீடம் இடித்தழிப்பு

## துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழு கடும் கண்டனம்

(ந.லோகதயாளன்)

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆள்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தின் பிரதான சுடர் ஏற்றும் பீடம் முற்றாக இடித்தழிக்கப்பட்டது.

அரச பயங்கரவாதத்தின் மிலேச்சத்தனமான செயல் என மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டாளரும் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவருமாகிய வி.எஸ். சிவகரன் கருத்துத் தெரிவிக்கையில்-

துயிலும் இல்ல நுழைவாயிலுக்கு அருகில் இராணு வம் உள்ள போது யார் உடைத்திருக்க முடியும் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

பல வருடங்களாக இருந்த இந்தப் பொதுச்சுடர் ஏற்றும் பீடத்தை சற்றும் மனிதாபிமானம் இன்றி மிலேச்சத்தனமான முறையில் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை தகவல் கிடைத்ததும் நானும் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவின் பொருளாளரும் மன்னார் நகர சபை தலைவருமாகிய அன்ரனி டேவிற் சனும் சென்று பார்வையிட்டோம்.

எனவே, இவ்வாறு தீபமேற்றும் பீடத்தை அழிப்பதன் ஊடாக அரசு சிற்றின்பம் அடையலாம்.

தமிழ் மக்களின் மனங்களில் அனு தினமும் தியாகச் சுடராக ஒளிர்ந்து கொண்டிருக்கும் எமது விடுதலை வீரர்களின் தியாகத்தையோ இலட்சிய வேட்கையையோ அரசால் சிதைத்துவிட முடியாது என்பதை இந்தக் கேவலமான செயலில் ஈடுபடுவோர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தச் சம்பவம் மாவீரர்களின் பெற்றோர்கள் மத்தியில் மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது - என்றார்.

# கூட்டு நினைவுகூர்தல் ஈழத்தமிழர் தேசியத்தின் பிரிக்கமுடியாத அங்கம்

## வடக்கு - கிழக்கு குருக்கள் துறவிகள் நிலைமையை தெளிவுபடுத்தி அறிக்கை

**(ந.லோகதயாளன்)**

**ஈழத்தமிழர்களின் கூட்டு நினைவுகூர்தல் என்பது தமிழ்த் தேசியக் கட்டுமானத்தின் பிரிக்க முடியாத அங்கமாக உள்ளது என்பதை நினைவூட்டுகின்றோம். ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான எமது தொடர் அர்ப்பணத்தையும் அனைத்துத் தரப்புக்கும் மீண்டுமொருமுறை உறுதி செய்கின்றோம்.**

**– இவ்வாறு வடக்கு, கிழக்கு நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள் அமைப்பு நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு ஆயர்மன்றத்தின் 'போரில் இறந்தவர்களை நினைவு கூர்தல்' தொடர்பான அறிக்கை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் வடக்கு, கிழக்கு ஆயர்மன்றம் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் கத்தோலிக்க மக்களின் கிறிஸ்தவ வாழ்வை பண்பாட்டு மயமாக்கி அதற்கான செயற்பாடுகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்துவதையும், ஒட்டுமொத்த ஈழத்தமிழ் மக்களின் கூட்டுரிமைகளுக்காக குரல் கொடுப்பதையும், இலங்கைத் தீவில் நீதியில் அடித்தளமிடப்பட்ட அமைதியை நிலை நாட்டுவதற்காக உழைப்பதையும் நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அண்மையில் அவர் களால் வெளியிடப்பட்ட 'போரில் இறந்த அனைவரையும்' நினைவு கூர்ந்து இறை வேண்டல் செய்வதற்கான அழைப்பு தமிழ் தேசிய எதிர்ப்பலைகளை உருவாக்கியிருப்பதை அவதானித்து 'நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள், வடக்கு, கிழக்கு' எனும் அமைப்பினராகிய நாம் மிகுந்த மன வேதனை அடைகின்றோம். ஆகவே, ஈழத்தமிழ் மக்களின் விடிவுக்கான கத்தோலிக்க திரு அவையின் தொடர் அர்ப்பணத்தை உறுதி செய்யும் முகமாக பின்வரும் கருத்துக்களை முன் வைக்க விரும்புகின்றோம்.

1. நவம்பர் மாதம் இறந்த அனை வருக்காகவும் இறை வேண்டல் செய்யும் மாதமாக உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்களால் காலங்காலமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இக்கா லத்தில் கல்லறைகளை தரிசிப்பதையும் இறந்தவர்களுக்கான வழிபாடுகளை மேற்கொள்வதையும் கிறிஸ்தவ மக்கள் தமது கடமையாக கருதி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இத்தகைய ஒரு நீண்ட மரபின் ஒரு பகுதியாகவே நாம் வடக்கு, கிழக்கு ஆயர்மன்றத்தின் மேற்படி வேண்டுகோளை பார்க்கின்றோம். அதற்கு அப்பால் இதற்கு எந்தவித அரசியல் பரிமாணமும் இல்லை என்பதே எமது நிலைப்பாடு.

2. மேற்படி அழைப்பில் நவம்பர் மாத மூன்றாவது சனிக்கிழமையில் போரில் இறந்த அனைவருக்காகவும் செபிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததே தவிர நவம்பர் இருபதாம் திகதி என்றல்ல. இவ்வருடம் அது 20ஆம் திகதி வருகிறது என்பதற்கப்பால் இந்த தினத்துக்கு வேறு முக்கியத்துவம் கிடையாது. உதாரணமாக அடுத்தடுத்த வருடங்களில் இது முறையே 19, 18, 17, என மாறி வரும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

3. மே 18ஐ இதே ஆயர் மன்றம் ஈழத்தமிழ் இனப்படுகொலை நாளென பிரகடனப்படுத்தி நினைவுகூர கடந்த மே மாதத்தில் அழைப்பு விட்டிருந்ததையும் இங்கு நினைவூட்ட விரும்புகின்றோம். ஆகவே, போரில் இறந்த அனைவருக்காகவும் இறைவேண்டல் செய்வதென்பது தமிழர் நெஞ்சங்களில் வாழும் மாவீரர்களையும், இன அழிப்புக்குள்ளான தமிழ்மக்களின் தியாகங்களையும் சமரசம் செய்வதாகாது. ஏற்கனவே தமிழ் மக்கள் நினைவுகூருகின்ற நாள் களில் அவர்களை நினைவுகூர்வது வரலாற்றுக் கட்டாயம் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

4. தமிழ்த் தேசியப் பரப்பு மத வரையறைகளைக் கடந்து ஈழத்தமிழ் மக்களை ஈழத்தமிழ்த் தன்மையில் ஒருங் கிணைக்கின்றது. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமது தமிழ்த் தேசிய ஒற்றுமையைக் குலைக்க முயலும் ஆபத்து பற்றியும் நாம் அனை வரும் விழிப்பாயிருக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியிலே அண்மையில் அதிகரித்துவரும் மத முரண்பாடுகள் குறித்து விரைந்து செயற்பட்டு நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து பேண நாம் முன்வர வேண்டும்.

5. எதிர்காலத்தில் இத்தகைய தவறான புரிதல்களை தவிர்க்கும் முகமாக வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம், தமிழ்த் தேசியம் சார் விடயங்களில் வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய சமயத் தலைவர்களோடும், சிவில் சமூக அமைப்புக்களோடும் நெருக்கமான ஒத்துழைப்பை தொடர்ந்து பேணும் என எதிர் பார்க்கின்றோம்.

இறுதியாக ஈழத்தமிழர்களின் கூட்டு நினைவு கூர்தல் என்பது தமிழ்த் தேசியக் கட்டுமானத்தின் பிரிக்க முடியாத அங்கமாக உள்ளது என்பதை நினைவூட்டி, ஈழத்தமிழர்களின் விடுதலைக்கான எமது தொடர் அர்ப்பணத்தையும் அனைத்துத் தரப்புக்கும் மீண்டுமொருமுறை உறுதி செய்கின்றோம் - என்றுள்ளது.

# யாழ்ப்பாணம் நீதிமன்ற எல்லையில் மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை!

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி, பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், சார்பில் இந்த மனுக்கள் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

முன்னர் கோப்பாயில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடத்தில் அமைந்துள்ள இராணுவத்தின் 512 பிரிகேட் தலைமையகத்துக்கு முன்பாகவும், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக சூழலிலும் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலைய எல்லையிலும் மாவீரர் இன்று நடத்து வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன எனவும் அந்த மனுவில் கூறப்பட்டது.

குற்றவியல் சட்டத்தின் 120 ஆவது பிரிவுக்கு அமையவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் படியும், இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும் இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியுள்ளனர். இந்த மனு இன்று யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் வி.ரி. சிவலிங்கம் முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நாளைமறுதினம் 21ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி வரை ஒரு வாரத்துக்கு நினைவேந்தல் நிகழ்வை நடத்தத் தடை உத்தரவு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது.

# கொரோனாவால் தென்மராட்சியில் 16 நாள்களில் 4 பேர் பரிதாபச் சாவு!

யாழ். தென்மராட்சிப் பகுதியில் கொரோனாப் பரவல் மிகத் தீவிரம் பெற்றுள்ளதுடன், கடந்த 16 நாள்களில் மாத்திரம் 118 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டு, நான்கு மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்று சுகாதாரத் தரப்பினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

தினமும் சராசரியாக 8 முதல் 10 தொற்றாளர்கள் என்றளவில் எண்ணிக்கை உயரத் தொடங்கிவிட்டது எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

சுகாதார நடைமுறைகளை மக்கள் இறுக்கமாகப் பின்பற்றாமை காரணமாக சமூகத்தில் தொற்று தீவிரமாகப் பரவியிருப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் அனைவரும் நோய் அறிகுறிகளுடன் தாமாக வந்து அன்டிஜன் பரிசோதனைக்கு தம்மை உட்படுத்திக்கொண்டனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலவச துரித அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் சுகாதாரத் தரப்பினர் அறிவித்துள்ளனர்.

அது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட இடங்களில் வசிப்பவர்கள் கொரோனா அறிகுறிகள் தென்படுமாயின், உடனடியாக தங்களை சுய தனிமைப்படுத்திக்கொள்ளுங்கள்.

அத்தோடு, காலதாமதமின்றி கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை, வரணி பிரதேச வைத்தியசாலை அல்லது சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் துரித அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளுங்கள்.

இவற்றுக்கு மேலதிகமாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய மூன்று தினங்களும் காலை 8.30 மணிக்கு குறித்த பரிசோதனை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது - என்றார்.